*10*

# “சத்தியத்தைத் தவிர வேறு எதுவுமில்லை”

## (1 இராஜாக்கள் 22)

*ஒரு சில விஷயங்களே சத்தியத்தைக் காட்டிலும் அதிக முக்கியமானவைகளாக உள்ளன. இயேசு, “சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்” என்று கூறினார் (யோவான் 8:32). ஞானியான மனிதர், “சத்தியத்தை வாங்கு, அதை விற்காதே” என்று கூறினார் (நீதிமொழிகள் 23:23). சத்தியத்தைக் கற்றுக்கொள்வதற்கு, ஏற்ற காலத்தில் நாம் அதற்குரிய விலையைச் செலுத்தி நமது சக்தியைப் பயன்படுத்தவும் வேண்டும்; நாம் அதைக் கொண்டிருக்கும்போது என்னவானாலும் சரி நாம் அதைப் பற்றிக்கொண்டிருக்க வேண்டும்!*

*இந்தப் பாடத்தில் நாம், பொதுவான சத்தியம் என்பது முக்கியமாக இருந்தாலும், அதைப் பற்றி அக்கறை கொள்வதில்லை, ஆனால் அதற்கு மாறாக, தேவனிடத்தில் இருந்து வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தைப் பற்றி அக்கறை கொள்பவர்களாக இருக்கிறோம். இயேசு தமது பிதாவினிடத்தில் “உம்முடைய வசனமே சத்தியம்” என்று கூறினார் (யோவான் 17:17). தாவீது “நீரே தேவன்; உம்முடைய வார்த்தைகள் சத்தியம்” என்று ஜெபித்தார் (2 சாமுவேல் 7:28). சங்கீதம் 119ல் அதன் எழுத்தாளர், தேவனுடைய வசனம் சத்தியம் என்று வலியுறுத்தினார்: “உம்முடைய வேதம் சத்தியம் ... உமது கற்பனைகளெல்லாம் உண்மை ... உம்முடைய வசனம் சமூலமும் சத்தியம்” (வசனங்கள் 142, 151, 160).*

*நாம் சத்தியத்தை அறிந்து நம்மை விடுவித்துக் கொள்ளும்படிக்குத் தேவன் வேதாகமத்தில் தமது சித்தத்தை நமக்குக் கொடுத்துள்ளார்: அவர் தம்மைப்பற்றியும் தமது குமாரனைப்பற்றியுமான சத்தியத்தையும், மனிதனைப்பற்றியும் பாவத்தைப்பற்றியுமான சத்தியத்தையும், இரட்சிப்பு மற்றும் கிறிஸ்தவ வாழ்வு பற்றிய சத்தியத்தையும், பரலோகம் மற்றும் நரகம் ஆகியவற்றின் சத்தியத்தையும் நமக்குக் கொடுத்துள்ளார். நாம், வேதாகமங்கள் நிரம்பிய ஒரு நாட்டில் வாழ்வதால், “சத்தியத்தைக் கற்றுக்கொள்வதற்கான வாய்ப்பை நாங்கள் பெற்றிருக்கவில்லை” என்று கூறுவதன்மூலம் நமது செய்கைகளுக்குச் சாக்குப்போக்கு கூற இயலாது.*

*கேள்வி பின்வருமாறு: சத்தியத்தைக் கொண்டு நாம் என்ன* செய்வோம்? *சத்தியத்தைக் கொண்டு நாம் நூற்றுக்கணக்கான விஷயங்களைச் செய்யமுடியும். நாம் அதை நாடமுடியும் (எரேமியா 5:1). நாம் அதை விசுவாசித்து அறிய முடியும் (1 தீமோத்தேயு 4:3). நாம் அதற்குக் கீழ்ப்படிய முடியும் (1 பேதுரு 1:22). நாம் அதைப் பேச முடியும் (சகரியா 8:16; எபேசியர் 4:15). நாம் அதில் நடக்க முடியும் (1 இராஜாக்கள் 2:4; 3:6; சங்கீதம் 86:11). நாம் அதை நடைமுறைப்படுத்த*

முடியும் (யோவான் 3:21; 1 யோவான் 1:6). நாம் அதைத் தாங்க முடியும் (1 தீமோத்தேயும் 3:15).

இன்னொரு புறத்தில், நாம் சத்தியத்தை மறைத்து வைக்கக் கூடும் (சங்கீதம் 40:10). நாம் அதை அமுக்கிவைக்கக் கூடும் (ரோமர் 1:18). நாம் ஒரு பொய்க்காக அதைப்பண்டமாற்று செய்யக்கூடும் (ரோமர் 1:25). நாம் அதற்குக் கீழ்ப்படிய மறுக்கக்கூடும் (ரோமர் 1:28; கலாத்தியர் 5:17). நாம் அதை எதிர்த்து நிற்கக்கூடும் (2 தீமோத்தேயும் 3:8). நாம் அதிலிருந்து புறம்பே திரும்பக்கூடும் (2 தீமோத்தேயு 4:4; தீத்து 1:4).

1 இராஜாக்கள் 22ம் அதிகாரம், சத்தியத்தை ஆகாப் மறுதலித்த விஷயம் அவரை எப்படிப் பிடித்தது என்று காண்பிக்கிறது. இருப்பினும், நாம் அந்த உச்சபட்சக் கணத்திற்குள் செல்வதற்கு முன்னர், சத்தியம் பயன்படுத்தப்பட்டதை, தவறாகப் பயன்படுத்தப்பட்டதை, தாறுமாறாகப் பயன்படுத்தப்பட்டதை நாம் காண்போம். வேதாகமத்தைப்பற்றிய நமது எண்ணப்போக்கு மற்றும் சத்தியத்தைப் புறக்கணித்தல் மற்றும் மறுதலித்தல் ஆகியவற்றின் விளைவுகள் பற்றிய வல்லமை நிறைந்த பாடங்கள் இந்த அதிகாரத்தில் காணப்படுகின்றன.

16ம் வசனத்தில் ஒரு ஆச்சரியமான உணர்ச்சி வெளிப்பாடு காணப்படுகிறது: ‘‘நீ கர்த்தருடைய நாமத்திலே *உண்மையை அல்லாமல் வேறொன்றையும்* என்னிடத்தில் சொல்லாதபடிக்கு, நான் எத்தனைதரம் உன்னை ஆணையிடுவிக்கவேண்டும்’’ (என்னால் வலியுறுத்தப்படுகிறது). துரதிர்ஷ்ட வசமாக, இந்த வார்த்தைகள் சத்தியத்துடன் விளையாட்டுகளை விளையாடிக்கொண்டிருந்த ஒரு மனிதரால் பேசப்பட்டவையாக இருந்தன.

## நாம் சத்தியத்துடன் விளையாட்டுகளை விளையாடக்கூடும் (22:1-17)

‘‘நீங்கள் சத்தியத்தை விரும்புகிறீர்களா?’’ என்று நம்மிடத்தில் கேட்கப்பட்டால், நம்மில் பெரும்பான்மையானவர்கள், ‘‘ஆம்!’’ என்று வலிவார்ந்த வகையில் பதில் அளிப்போம். இருப்பினும், நாம் சத்தியத்திற்காக அந்த அளவுக்கு ஆவல் உள்ளவர்களாக இராதிருக்கலாம். எரிக் பெர்ன் என்பவர், *மக்கள் விளையாடும் விளையாட்டுகள்* என்ற பெயரில் 1964ல் ஒரு புத்தகத்தை எழுதினார், அது மனித உறவுகளின் மனோதத்துவம் மீதான ஒரு புத்தகமாகும். மக்கள் சத்தியத்துடன் விளையாட்டுகளை விளையாடுகின்றனர். 22ம் அதிகாரத்தின் முதல் பகுதி, மக்கள் விளையாடும் விளையாட்டுகளின் உதாரணங்களால் பொதியப்பட்டுள்ளது.

### “உடன்பாட்டு” விளையாட்டு

தேவபக்தியுள்ள ஒரு அரசர் ‘‘உடன்பாட்டு’’ விளையாட்டை விளையாண்டார்.

> சீரியருக்கும் இஸ்ரவேலருக்கும் மூன்று வருஷம் யுத்தமில்லாதிருந்தது. மூன்றாம் வருஷத்திலே யூதாவின் ராஜாவாகிய யோசபாத் இஸ்ரவேலின் ராஜாவினிடத்திற்குப் போயிருக்கும்போது (வசனங்கள் 1, 2).

இது குறிப்பிடத்தக்க ஒரு நிகழ்வாக இருந்தது. பதிவேட்டில் உள்ள விபரப்படி,

இதுவே யூதாவின் அரசர் ஒருவர் இஸ்ரவேலின் அரசரை யுத்தகளம் தவிர வேறொரு இடத்தில் சந்திக்கும் முதல் முறையாக இருந்தது.[1] யோசபாத் ஆகாபைச் சந்திக்கச் சென்றதற்கான எல்லாக் காரணங்களையும் நாம் அறிய இயலாது, ஆனால் நாளாகமத்தின் எழுத்தாளர்[2] இந்தப் பயணத்தைப் பல ஆண்டுகளுக்கு முன்னதாக நடைபெற்றிருந்த ஒரு நிகழ்ச்சியுடன் பிணைத்தார்: "யோசபாத்துக்கு ... அவன் ஆகாபோடே சம்பந்தங்[3]கலந்து" (2 நாளாகமம் 18:1). ஒன்பது அல்லது அதற்குச் சற்றேறக்குறையலான ஆண்டுகளுக்கு முன்பு, யோசபாத்தின் மகனான யோராம், ஆகாப் மற்றும் யேசபேல் ஆகியோரின் மகளான அத்தாலியாளைத் திருமணம் செய்திருந்தார்.[4]

1 இராஜாக்கள் 22ம் அதிகாரத்தின் பிற்பகுதியில், யோசபாத்தினுடைய வாழ்க்கையின் குறைபாடுகள் பட்டியலிடப்படுகையில், அவர் "இஸ்ரவேலின் ராஜாவோடே சமாதானமாயிருந்தார்" என்பது திறவுகோல்போன்ற ஒரு விஷயமாக உள்ளது (வசனம் 44). யோசபாத் பூரணப்பட்டவராக இருக்கவில்லை, ஆனால் அவர் யூதா இராஜ்யத்தின் சிறப்பான அரசர்களில் ஒருவராக இருந்தார். "அவன் தன் தகப்பனாகிய ஆசாவின் வழிகளிலெல்லாம் நடந்தான்; அவன் அதை விட்டு விலகாமல் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்" (வசனம் 43).[5] யோசபாத்தின் தேவபக்தியுள்ள வாழ்விற்கு நேர் மாறாக, ஆகாப் இஸ்ரவேல் இராஜ்யத்தின் மிகவும் தேவபக்கியற்ற அரசர்களில் ஒருவராக இருந்தார் (1 இராஜாக்கள் 16:33). யோசபாத், சமாதானமே மிகவும் முக்கியமானது என்று நம்பி இருப்பார் என்பது உறுதி, எனவே அவர் தமது மகனுக்கும் ஆகாபின் மகளுக்கும் இடையில் திருமணத்தை ஒப்புக்கொண்டார்.[6] அவர் ஆகாபுடன் உடன்படிக்கையும் செய்துகொண்டார்.

யோசபாத்தின் நோக்கங்கள் உயர்வானவை என்பதில் சந்தேகம் இல்லை. சமாதானம் என்பது பரஸ்பரம் பயனுள்ளதாக இருக்கும் என்றும் காலம் கடக்கும்போது இஸ்ரவேல் தனது தேவபக்தியற்ற வழிகளைக் கைவிடும் வகையில் தாம் அதன்மீது செல்வாக்குச் செலுத்த முடியும் என்றும் அவர் நினைத்திருக்கலாம். இருப்பினும் அவர் செய்தது கொள்கையில் தவறானதாகவும், நடைமுறையில் அழிவுக்குரியதாகவும் இருந்தது,[7] மற்றும் அது தனது விளைவுகளில் ஏறக்குறைய சாவுக்கேதுவானதாக இருந்தது.[8] சமாதானம் விரும்பப்படத் தக்கதாவே உள்ளது,[9] ஆனால் அது ஒருக்காலும் சத்தியத்தைச் சமரசம் செய்துகொள்ளுதல் என்ற விலை கொடுத்துப் பெறப்படுவதாக இருக்கக்கூடாது. ஞானியான மனிதர், "சத்தியத்தை வாங்கு, அதை விற்காதே" என்று கூறினார் (நீதிமொழிகள் 23:23). சமாதானத்திற்காகச் சத்தியத்தை ஒருக்காலும் விற்றுப்போடாதீர்கள்; அது மிகவும் உயர்ந்த விலையாக உள்ளது.

யோசபாத் சமாரியாவை வந்தடைந்தபோது, அவருக்கு ஆகாப் ஒரு பெரிய விருந்தளித்தார். "ஆகாப் அவனுக்கு ... அநேகம் ஆடுமாடுகளை அடிப்பித்தான்" (2 நாளாகமம் 18:2). விருந்தின் மத்தியில் ஆகாப், யோர்தான் நதிக்கு அப்புறத்தில் உள்ள ஒரு நகரத்தைப் பற்றித் தற்செயலாகப் பேசத் தொடங்கினார்: "கீலேயாத்திலுள்ள ராமோத் நம்முடையதென்று அறியீர்களா? நாம் அதை சீரியா ராஜாவின் கையிலிருந்து பிடித்துக்கொள்ளாமல், சும்மா யிருப்பானேன்" என்றான் (வசனம் 3). ஆகாப், யோசபாத்தின் பிரயோஜனத்திற்காகப் பேசிக்கொண்டிருந்தார், ஆனால் அவர் "தமது ஊழியக்காரரிடத்தில்" பேசினார். அவர் ஒரு விளையாட்டை விளையாடிக்கொண்டிருந்தார்.

"ராமோத் - கீலேயாத்" என்பது கீலேயாத்திலுள்ள ராமோத் என்று அர்த்தப்படுகிறது. கீலேயாத் என்பது யோர்தானின் கிழக்கில் இருந்த பண்படாத கிராமப்பகுதியாகும், அது எலியாவின் சொந்த ஊராக இருந்தது.[10] கீலேயாத்திலுள்ள ராமோத் என்பது மதில்சூழ்ந்த ஒரு நகரமாக, பாதுகாப்புக் கோட்டையுள்ள இடமாக இருந்தது. அது யோர்தானின் கிழக்குப் பகுதியில் இருந்து இஸ்ரவேல் நாட்டிற்குள் அணுகிவருவதைக் கண்காணிக்க ஏதுவான உயரமான இடத்தில் வியூகத்துவமாக அமைக்கப்பட்டிருந்தது. இருப்பினும் இப்போது அது சீரியாவின் படைகளால் கட்டுப்படுத்தப்பட்டதாகவும் இஸ்ரவேலுக்குத் தொடர்ந்து அச்சுறுத்துலை முன்வைப்பதாகவும் இருந்தது. தற்செயலாக, சீரியாவின் அரசனான பெனாதாத் தனது "சகோதரன்" ஆகாபுக்கு தான் கொடுத்த வார்த்தையைக் காத்துக்கொண்டிருக்கவில்லை என்று 1 இராஜாக்கள் 20:34ம் வசனமானது, கூறுகிறது.

பின்பு ஆகாப் யோசபாத்திடம் நேரடியாகப் பேசினார்: கீலேயாத்திலுள்ள ராமோத்தின்மேல் யுத்தம்பண்ண என்னோடேகூட வருகிறீரா? யோசபாத் தயக்கம் காட்டவில்லை என்பது உறுதி: "நான்தான் நீர், என்னுடைய ஜனங்கள் உம்முடைய ஜனங்கள், என்னுடைய குதிரைகள் உம்முடைய குதிரைகள்" (1 இராஜாக்கள் 22:4). இது, "நாம் ஒன்றாக யுத்தத்திற்குச் செல்வோம்" என்று கூறுவதற்கான கிழக்கத்திய தேசத்துப் பழக்கமாக/வழியாக இருந்தது. நாளாகமத்தில் இவ்விடத்தில், "உம்மோடேகூட யுத்தத்திற்கு வருகிறேன்" என்பது கூட்டப்பட்டுள்ளது (2 நாளாகமம் 18:3).

யோசபாத் ஆகாபுடன் யுத்தத்திற்குச் செல்ல உடனே சம்மதித்தது ஏன்? ஒருவேளை அது யூதாவுக்கும் இஸ்ரவேலுக்கும் இடையில் இன்னும் ஒருமைப்பாட்டை வளர்ப்பதற்கான முயற்சியாக இருந்திருக்கலாம். ஒருவேளை அது, சீரியா நாட்டினர் கீலேயாத்திலுள்ள ராமோத்தில் இருந்தது என்பது யூதாவுக்கும் ஒரு அச்சுறுத்தலாக இருந்தது என்பதால் இருக்கலாம், ஏனெனில் கீலேயாத்தில் உள்ள ராமோத் என்பது எருசலேமில் இருந்து நாற்பது மைல்கள் தொலைவிலேயே இருந்தது. ஒருவேளை இது ஆகாப் ஒரு நல்ல வியாபாரியாக இருந்ததால் நடைபெற்றிருக்கலாம். 2 நாளாகமம் 18ம் அதிகாரம், "ஆகாப், கீலேயாத்திலுள்ள ராமோத்திற்கு வரும்படி அவனை *ஏவினான்*" என்று கூறுகிறது (வசனம் 2; என்னால் வலியுறுத்தப்படுகிறது). காரணம் எதுவாக இருந்தாலும், தேவன் இதில் பிரியப்படவில்லை. யோசபாத் யுத்தத்திற்குப் பின்பு வீடு திரும்பியபோது, அவர் தேவனுடைய தீர்க்கதரிசி ஒருவரால் சந்திக்கப்பட்டார்:

> அப்பொழுது அனானியின் குமாரனாகிய யெகூ என்னும் ஞான திருஷ்டிக்காரன் புறப்பட்டு, அவனைச் சந்தித்து, ராஜாவாகிய யோசபாத்தை நோக்கி: துன்மார்க்கனுக்குத் துணைநின்று, கர்த்தரைப் பகைக்கிறவர்களை நீர் சிநேகிக்கலாமா? இதினிமித்தம் கர்த்தருடைய கடுங்கோபம் உம்மேல் வர இருந்தது (2 நாளாகமம் 19:2).

தேவனைப் பின்பற்றத் தங்களை ஒப்புக்கொடுத்தவர்களின் நோக்கம் எவ்வளவு "நல்லதாக" இருந்தாலும், அவர்கள் பொல்லாங்குடன் சமரசம் செய்துகொள்ளுவதைக் குறித்துத் தேவன் ஒருக்காலும் மகிழ்வடைவது இல்லை.[11] நாம் பொல்லாங்குடன் சமரசம் செய்யத் தொடங்கும்போது, அது உடனேயே

பெரியதாக உருவெடுக்கத்துவங்குகிறது. யோசபாத் சமாதானத்திற்காகக் கைநீட்டுதல் என்பதைக் கொண்டு தொடங்கினார்; இப்போது அவர் யுத்தத்தில் தமது உயிரையே பணயம் வைப்பவராக இருப்பார்.

### "அவர்கள் - கேள்விப்பட - விரும்புவதை - அவர்களுக்குக் - கூறுதல்" என்ற விளையாட்டு

கள்ளத் தீர்க்கதரிசிகள், "அவர்கள் கேள்விப்பட விரும்புவதை அவர்களுக்குக் கூறுதல்" என்ற விளையாட்டை விளையாண்டார்கள். "பின்னும் யோசபாத் இஸ்ரவேலின் ராஜாவைப் பார்த்து: கர்த்தருடைய வார்த்தையை இன்றைக்கு விசாரித்து அறியும் என்றான்" (வசனம் 5). "நான் உண்மையாக யுத்தத்திற்குச் செல்வதற்கு முன்னர் யெகோவாவிடம் கேட்டு விசாரிப்போமாக." நாம் ஒரு மும்முரமான முடிவை மேற்கொள்ள வேண்டியுள்ள வேளை எதிலும், நாம் முதலில் கர்த்தரிடமாகச் செல்ல வேண்டும்[12] *மற்றும்* அவரது பதிலை ஏற்றுக்கொள்ள மனவிருப்பமாக இருக்க வேண்டும்.

"அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா ஏறக்குறைய நானூறு தீர்க்கதரிசிகளைக் கூடிவரச்செய்து" (வசனம் 6அ). இந்த நானூறு தீர்க்கதரிசிகளும் யெகோவாவின் தீர்க்கதரிசிகள் என்று அழைக்கப்படுவது இல்லை. ஒரு இடத்தில் அவர்கள் யெகோவாவின் நாமத்தை உச்சாடனம் செய்தனர் (வசனங்கள் 11, 12, 24), ஆனால் அவர்களை, யெகோவாவின் தீர்க்கதரிசிகள் என்பதற்கு மாறாக, ஆகாபின் தீர்க்கதரிசிகள் என்று ஒரு உண்மையான தீர்க்கதரிசி குறிப்பிட்டார் (வசனங்கள் 22, 23). அவர்கள் யாராக இருந்தனர் என்று நாம் நிச்சயமாக அறிவ தில்லை. ஒருவேளை ஆகாப், எலியா கொன்றிருந்த பாகாலின் தீர்க்கதரிசிகள் 450 பேர்களுக்குப் பதிலாக இவர்களை வைத்திருக்கலாம். ஒருவேளை இவர்கள் கொல்லப்பட்டிராத ஆஷெராவின் நானூறு தீர்க்கதரிசிகளாக இருந்திருக்கலாம்.[13] ஒரு விஷயம் தெளிவாக உள்ளது: இவர்கள், ஆகாப் தாம் கேள்விப்பட விரும்பியதைக் கூறும்படி ஆகாபினால் தக்கவைத்துக் கொள்ளப்பட்டிருந்த அரண்மனைத் தீர்க்கதரிசிகளாக இருந்தனர்.

அவர்களிடத்தில் ஆகாப், "நான் கீலேயாத்திலுள்ள ராமோத்தின்மேல் யுத்தம்பண்ணப்போகலாமா, போகலாகாதா" என்று கேட்டார். அதற்கு அவர்கள், "போம், ஆண்டவர் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுப்பார்" என்றனர் (வசனம் 6ஆ). அவர்கள், உண்மையான தீர்க்கதரிசிகள் செய்யக் கவனமாக இருந்ததான, "யெகோவாவின் நாமத்தில்" என்று கூறவில்லை.[14] அவர்கள் யெகோவாவை பற்றிக் குறிப்பிடவே இல்லை. இவ்வசனத்தில் உள்ள "ஆண்டவர்" என்ற வார்த்தை, பாகாலையும் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்ட *அதோனாயி* என்ற எபிரெய வார்த்தையில் இருந்து வந்துள்ளது.[15]

உண்மையில், அந்த நானூறு தீர்க்கதரிசிகளால் தரப்பட்ட முழுப் பதிலும் குழப்பமானதாக இருந்தது. "போம், ஆண்டவர் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுப்பார்." எந்த "ஆண்டவர்"? யெகோவா தேவனா அல்லது பாகாலா? எந்த "இராஜா"? இஸ்ரவேலின் இராஜாவா அல்லது சீரியாவின் இராஜாவா? அதை ["it" என்ற இவ்வார்த்தை தமிழ் வேதாகமத்தில் இவ்விடத்தில் காணப்படுவ தில்லை] என்பது எதை அர்த்தப்படுத்திற்று? அது எதை வேண்டுமென் றாலும் அர்த்தப்படுத்தக்கூடும்,[16] அது ஆகாப் பெனாதாத்தின் கைகளில் கொடுக்கப்பட்டார் என்ற வகையில், ஆகாபைக் கூட அர்த்தப்படுத்தக் கூடும்.

*(இந்தத் தீர்க்கதரிசிகளின் செய்தியானது, தெளிவற்ற முன்னுரைத்தல்கள் ஏறக்குறைய எதை வேண்டுமென்றாலும் அர்த்தப்படுத்தும் வகையில் குறிப்புச் செய்திகளைச் சித்தரித்த "மனோதத்துவக்காரர்களின் தீர்க்கதரிசனங்கள்" போன்றதாக இருந்தது.)*

*அவர்களின் தெளிவற்ற பதிலினால் யோசபாத் திருப்தியடையாமற் போனது பற்றி நாம் திகைப்படைவதில்லை. "பின்பு யோசபாத்: நாம் விசாரித்து அறிகிறதற்கு இவர்களையல்லாமல் கர்த்தருடைய தீர்க்கதரிசி வேறே யாராகிலும் இங்கே இல்லையா என்று கேட்டான்" (வசனம் 7). உங்கள் வேதாகமத்தை ஆய்வுசெய்யுங்கள்; "கர்த்தருடைய" என்ற வார்த்தையை இவ்விடத்தில் நீங்கள் பெரிய எழுத்துக்களில் [LORD] காணவேண்டும், இது தேவனுடைய பரிசுத்த மான நாமமான யெகோவா என்பதைக் குறிக்க நிற்கிறது என்று காண்பிக்கும். யோசபாத், "என்ன நடக்கப்போகிறது என்று தேவனுடைய உண்மையான ஒரு தீர்க்கதரிசியிடத்தில் கேட்க நான் விரும்புகிறேன்" என்று கூறினார்.*

**"அது - என்னுடன் - ஒத்துப்போகும் - வரையிலும் - நான் - அந்த - சத்தியத்தை - விரும்புகிறேன்" என்ற விளையாட்டு**

*தேவபக்தியற்ற அரசர் "அது என்னுடன் ஒத்துப்போகும் வரையிலும் நான் அந்த சத்தியத்தை விரும்புகிறேன்" என்ற விளையாட்டை விளையாண்டார். ஆகாப் யோசபாத்துக்கு அளித்த பதிலில் தமது பண்பைப்பற்றி அதிகமானவற்றை வெளிப்படுத்தினார்: "கர்த்தரிடத்தில் விசாரித்து அறிகிறதற்கு இம்லாவின் குமா ரனாகிய மிகாயா என்னும் இன்னும் ஒருவன் இருக்கிறான்; ஆனாலும் நான் அவனைப் பகைக்கிறேன்; அவன் என்னைக்குறித்து நன்மையாக அல்ல, தீமை யாகவே தீர்க்கதரிசனஞ்சொல்லுகிறவன்" (வசனம் 8அ).*

இவ்வசனப் பகுதியானது பல விஷயங்களை நமக்குக் கூறுகிறது:

*முதலாவது, இன்னொரு தீர்க்கரிசியான மிகாயா,[17] ஆகாபைப் பல சந்தர்ப்பங்களில் எதிர் கொண்டிருந்தார்.[18] "மிகாயா" என்றால் "யெகோவாவுக்கு ஒப்பானவர் யார்?" என்று அர்த்தப்படுகிறது. ஒருவேளை அவர், கர்மேல் மலையின்மீது எலியாவின் தைரியத்தினால் செயலாற்றத் தூண்டப்பட்டிருந்த இன்னொரு தீர்க்கதரிசியாக இருந்திருக்கலாம். யூதப்பாரம்பரியத்தின்படி, அவர் ஆகாபுக்கு அறைகூவல் விடுக்க 1 இராஜாக்கள் 20ல் வேஷம்மாறி வந்த தீர்க்கதரிசியாக இருந்தார்.*

*இரண்டாவது, சத்தியம் என்பது எப்போதுமே மகிழ்வானதாக இருப்ப தில்லை. சத்தியம் என்பது எப்போதுமே தமக்கு "நல்ல செய்தியாக" இருக்க வேண்டும் என்று ஆகாப் நினைத்தார். இருப்பினும் சத்தியம் என்பது எப்போதுமே "நல்லதாக" இருப்பதில்லை; அது சிலவேளைகளில் "பொல்லாங்கானதாக" (மிகவும் மோசமானதாக) உள்ளது. ஒரு பழைய கூற்றானது, "சத்தியம் புண்படுத்துகிறது" என்று கூறுகிறது. சத்தியமானது சிலவேளைகளில் குணமாக்குகிறதென்றாலும், இந்தக் கூற்றானது, நாம் இதைக் கேள்விப்படும்போது சம்மதியாகத் தலையை அசைக்கப்போதுமான அளவுக்கு, அடிக்கடி மிகச்சரியானதாக உள்ளது.*

*அபிலைன் கிறிஸ்தவப் பல்கலைக்கழகத்தில் முகவர் ஃப்ரெட் பார்ட்டன் என்பவரின் கீழாக நான், பிரசங்கித்தல் பற்றிய ஒரு பாடத்தைப் படித்துக்கொண்டிருந்தேன். அதில் முதல்பருவம், பிரசங்கங்களைத் தயாரித்தல்*

பற்றியதாகும்; நான் அதில் "A" கிரேடில் [முதல் வகுப்பில்] தேர்ச்சி அடைந்தேன். அடுத்த பருவம் எடுத்துரைத்தல் பற்றியதாக இருந்தது. நான் எனது வாழ்நாள் முழுவதிலும் பேச்சுப் போட்டிகளில் வெற்றிபெற்றிருந்தபடியாலும், பல ஆண்டுகளாகப் பிரசங்கித்து இருந்தபடியாலும், அது எனது பலத்த இடம் என்று நான் நினைத்தேன்; அந்தப் படிப்பில் எனக்கு ஒரு "A+" கிடைக்கும் என்று நான் எதிர்பார்த்தேன். [ஆனால்]நான் அதின் தொடக்ககால முயற்சிகளில் ஒரு "C" கிரேடைப் பெற்றபோது நான் எவ்வளவு கோபம் அடைந்தேன் என்று என்னால் நினைவுகூர முடிகிறது. நான் பேசுவதற்கு முன்னர் அவரிடத்தில் கையளித்திருந்த வரைகுறிப்பு விமர்சனத்தால் மூடப்பட்டிருந்தது, அதில் பெரும்பான்மையானது நடைப்பாங்குகள் பற்றியதாக இருந்தது. நான் வெளியே வந்த உடனேயே, அந்தக் குறிப்புத் தாள்களைக் கோபத்துடன் சிறுதுண்டுகளாகக் கிழித்து காற்றில் பறக்கவிட்டேன், முகவர் பார்ட்டன் என்னிடத்தில், "நல்லது" என்று கூறவேண்டும் என்று நான் விரும்பியிருந்தேன்; அதற்குப் பதிலாக அவர் என்னிடத்தில் உண்மையைக் கூறினார். முடிவில், உண்மை கூறப்பட்டிருந்த விஷயம் எனக்கு நன்மையைச் செய்தது, பேசுவதில் நான் வளர்த்துக் கொண்டிருந்த தீய பழக்கங்களில் இருந்து நான் படிப்படியாக விலகினேன். இருப்பினும் அந்த வேளையில் நான் அதை விரும்பவில்லை!

நாம் சத்தியத்தை விரும்புகிறதாகக் கூறுகிறோம், ஆனால் உண்மையிலேயே நாம் அதை விரும்புகிறோமா? நாம் மருத்துவரிடத்தில் செல்லும்போது, நமது உடல்நலத்தைப் பற்றிய உண்மையை நாம் விரும்புகிறோமா அல்லது "எல்லாம் நேர்த்தியாக உள்ளது" என்று கேள்விப்பட விரும்புகிறோமா?[19] நாம் எடைபார்க்கும் தராசில் ஏறிநிற்கும்போது, நாம் உண்மையை விரும்புகிறோமா அல்லது அந்த எடைபார்க்கும் தராசானது "உங்கள் எடை மிகச்சரியாக உள்ளது" என்று சுட்டிக்காண்பிக்க விரும்புகிறோமா?

மூன்றாவது, *ஆகாப்* உண்மையை *விரும்பவில்லை* என்பது தெளிவு. மாறாக அவர் தாம் கேட்க விரும்பியது கூறப்பட வேண்டும் என்று விரும்பினார். இந்த எண்ணப்போக்கைப் பற்றிப் பவுல் பின்வருமாறு கூறினார்:

> ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு, சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகுங்காலம் வரும் (2 தீமோத்தேயு 4:3, 4).

ஆகாபைச் சுற்றிலும் ஆவிக்குரிய வகையில் "ஆமாம்போடும் மனிதர்கள்" இருந்தனர், அவர்கள் அவரது செவித்திணவுக்கு ஏற்றவர்களாக இருந்தனர். மிகாயாவைப் போன்ற யாரேனும் ஒருவர் வந்து எரிச்சலூட்டும் உண்மையைப் பேசுவதை அவர் விரும்பவில்லை என்பது அதிநிச்சயமாகும்!

யோசபாத் ஆகாபைக் கடிந்துகொண்டார்: "ராஜாவே அப்படிச் சொல்ல வேண்டாம்" (வசனம் 8ஆ). அவர், "யெகோவாவினுடைய தீர்க்கதரிசி ஒருவரைப் பற்றி அப்படிக் கூறவேண்டாம். அவரை அழைப்பதை மறுக்க வேண்டாம். கர்த்தருடைய வார்த்தை என்ன என்று நான் அறிய விரும்புகிறேன்" என்று கூறினார்.

"அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா பிரதானிகளில் ஒருவனைக் கூப்பிட்டு: இம்லாவின் குமாரனாகிய மிகாயாவைச் சீக்கிரமாய் அழைத்துவா என்றான்" (வசனம் 9). இவ்வசனமும் 26ம் வசனமும், கடந்த காலத்தில் ஆகாபிடத்தில் மிகாயா "பொல்லாங்கை (அதாவது உண்மையை) பேசியதற்காக" சிறையில் அடைக்கப்பட்டிருந்தார் என்று சுட்டிக்காண்பிக்கின்றன. இவ்வாறாக ஆகாபின் அலுவலர் மிகாயாவை "சீக்கிரமாக" கண்டுபிடிக்கவும் அவரைத் திரும்பக் கொண்டுவரவும் முடிந்தது.

மிகாயாவைக் கொண்டுவர ஒரு அலுவர் சென்றிருக்கையில், காட்சி மாறிற்று. "இஸ்ரவேலின் ராஜாவும் [ஆகாபும்] யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தும், சமாரியாவின் ஒலிமுகவாசலுக்கு முன்னிருக்கும் விசாலத்திலே[20] ராஜவஸ்திரம் தரித்துக்கொண்டவர்களாய், அவரவர் தம்தம் சிங்காசனத்தில் உட்கார்ந்திருந்தார்கள்" (வசனம் 10அ). நகரத்தின் ஒலிமுகவாசல்கள் என்பவை பொதுவான பரிவர்த்தனைகளில் பெரும்பான்மையானவை நடைபெறும் இடங்களைக் குறித்தன. இரண்டு அரசர்களும், தங்களின் அரச உடைகளை உடுத்தியவர்களாக, நகர்த்திச் செல்லப்படக்கூடிய தங்கள் அரியணைகளில் அமர்ந் திருந்தனர்.

> சகல தீர்க்கதரிசிகளும் அவர்களுக்கு முன்பாகத் தீர்க்கதரிசனஞ்சொன்னார்கள். ... சகல தீர்க்கதரிசிகளும் அதற்கு இசைவாகத் தீர்க்கதரிசனம் சொல்லி, கீலேயாத்திலுள்ள ராமோத்துக்குப்போம், உமக்கு வாய்க்கும்; கர்த்தர் அதை ராஜாவின் கையில் ஒப்புக்கொடுப்பார் என்றார்கள் (வசனங்கள் 10ஆ, 12).

தீர்க்கதரிசிகளில் ஒருவராக இருந்த சிதேக்கியா[21] என்பவர், *உங்கள் பாடங்களுக்கு ஒரு காட்சிமூலமான வலியுறுத்தம் கொடுங்கள்* என்ற எனது புத்தகத்தை வாசித்திருந்தார் என்பது தெளிவு. அவர் இரும்புக்கொம்புகளை உண்டாக்கித் தமது தலையில் கொம்புகளைப் போன்று அணிந்துகொண்டு மற்ற தீர்க்கதரிசிகளை நோக்கிச் சென்று அவர்களை முட்டித்தள்ளி, "இவைகளால் நீர் சீரியரை முட்டி நிர்மூலமாக்கிப் போடுவீர் என்று கர்த்தர் சொல்லுகிறார்"[22] என்று கூறினார் (வசனம் 11).

11 மற்றும் 12 ஆகிய இரு வசனங்களிலும், "கர்த்தர்" என்ற வார்த்தை முழுவதும் பெரிய எழுத்துக்களில் [LORD] உள்ளது; தீர்க்கதரிசிகள் இப்போது யெகோவாவின் நாமத்தில் ஒருவர் மீது ஒருவர் முட்டிக்கொண்டனர். இந்தத் தீர்க்கதரிசிகள், ஆகாபும் யோசபாத்தும் விரும்பிய எந்த வகையிலும் அவர்களுக்குப் பிரசங்கித்திருக்க முடிந்திருந்தது. அவர்கள் ஏற்கனவே ஆராதித்துக் கொண்டிருந்த நூற்றுக்கணக்கான தேவர்களுடன் ஒன்றிரண்டு கடவுள்களைக் கூட்டுதல் என்பது அவர்களுக்குப் பிரச்சனையாக இருக்க வில்லை. அரசர்கள், எபிரெய தேவனான "யெகோவா" என்ன கூற இருந்தார் என்று அறிய விரும்பினால், அவர்கள் அதற்குக் கீழ்ப்படிய மகிழ்ச்சியாக இருந்தனர்.

### "உங்களுக்கு - நல்லது - எது - என்று - கூறுவதற்கு - என்னை - அனுமதியுங்கள்" என்ற விளையாட்டு

மென்மையாகப் பேசும் ஒரு அதிகாரி, "உங்களுக்கு - நல்லது - எது

*என்று - கூறுவதற்கு - என்னை - அனுமதியுங்கள்'' என்ற விளையாட்டை விளையாண்டார். "மிகாயாவை அழைக்கப்போன ஆள் அவனுடன் பேசி: இதோ, தீர்க்கதரிசிகளுடைய வார்த்தைகள் ஏகவாக்காய் ராஜாவுக்கு நன்மை யாயிருக்கிறது'' என்றார் (வசனம் 13அ). "ஏகவாக்காய் இராஜாவுக்கு நன்மை யாயிருக்கிறது'' என்றால் "இதை ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்கின்றனர்'' என்று அர்த்தப்படுகிறது. தேவனுடைய வழியை எதிர்த்துநிற்பதில் "சீர்த்தன்மை" இருக்கும்போது, தேவனுக்காகப் பேசும் தனிமையான குரலாக இருக்கக் கூட்டத்தில் எழுந்து நிற்குதல் என்பது கடினமானதாக உள்ளது.*

*மிகாயாவை அழைக்கப்போன ஆள், ''எங்களுக்குள் ஐக்கியமும் இசைவிணக்கமும் உள்ளது. நீ படகை ஆட்டி அலைக்கழித்து விடாதே" என்று கூறினார். "உம்முடைய வார்த்தையும் அவர்களில் ஒருவர் வார்த்தையைப்போல இருக்கும்படி நன்மையாகச் சொல்லும்" (வசனம் 13ஆ). "நீ அவ்வாறு செய்தால் நாங்கள் நன்றாக இருப்போம். அரசர் மகிழ்ச்சி அடைவார், நான் தயவுடன் கண்ணோக்கப்படுவேன், நீ சிறைச்சாலையில் இருந்து வெளியே வந்துவிடலாம், தயவுசெய்து* மாற்றத்திற்காக நல்லவை சிலவற்றைக் கூறு!" இந்த அலுவலர், தீர்க்கதரிசிகளிடத்தில் பின்வருமாறு கூறிய, ஏசாயா எழுதிய நபரைப்போல் இருந்தார்: ''யதார்த்தமாய் எங்களுக்குத் தரிசனஞ்சொல்லாமல், [அதற்கு மாறாக] எங்களுக்கு இதமான சொற்களை [நேரடியான அர்த்தத்தில், மென்மை யான விஷயங்களை உரைத்து] மாயமானவைகளைத் திருஷ்டியுங்கள்" (ஏசாயா 30:10).

*கடைசியாக, தைரியமான தீர்க்கதரிசி ஒருவர், "எல்லா விளையாட்டுகளையும் மறந்து விடுங்கள்! அதை உள்ளது உள்ளவாறே நாம் கூறுவோமாக!" என்று சொன்னார். கடைசியாக நாம் நமது வீரப்பெருமகனைச் சந்திக்கிறோம்: "அதற்கு மிகாயா: [அந்த ஆளிடத்தில்] 'கர்த்தர் என்னிடத்தில் சொல்வதையே சொல் லுவேன் என்று கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்றான்' " (வசனம் 14). நம்மில் பிரசங்கிக்கும் மற்றும் போதிக்கும் யாவரும் இந்த வார்த்தைகளை நமது இருதயங்களில் செதுக்கி வைத்துக்கொள்வது அவசிய மாகும்!*

*மிகாயா ஆகாபிடத்தில் சென்று சேர்ந்தபோது, விளையாட்டை விளையாடுதல் தொடர்ந்தது. ''ராஜா அவனைப் பார்த்து: மிகாயாவே, நாங்கள் கீலேயாத்திலுள்ள ராமோத்தின்மேல் யுத்தம்பண்ணப்போகலாமா, போகலாகாதா என்று கேட்டான்'' (வசனம் 15அ). மிகாயா என்ன கூறினார் என்பது பற்றி ஆகாப் கவலைப்படவில்லை; அவர் யோசபாத்தின் பிரயோஜனத் திற்காகவே கேட்டார். அவர் யோசபாத்தின் பிரயோஜனத்திற்காகக் கேட்டார் என்பதை மிகாயா அறிந்திருந்தார் மற்றும் ஆகாப் யோசபாத்தின் பிரயோஜனத் திற்காகக் கேட்டார் என்று மிகாயா அறிந்திருந்தார் என்பதை ஆகாபும் அறிந்தி ருந்தார் மற்றும் ஆகாப் அறிந்திருந்தார் என்பதை மிகாயா அறிந்திருந்தார் ... அவர்கள் விளையாட்டுகளை விளையாண்டுகொண்டு மாத்திரம் இருந்தனர். மிகாயா விளையாட்டை விளையாண்டார். கள்ளத் தீர்க்கதரிசிகள் கொடுத்திருந்த அதே பதிலை அவரும் கொடுத்தார்: "போம், உமக்கு வாய்க்கும்; கர்த்தர் அதை ராஜாவின் கையில் ஒப்புக்கொடுப்பார்'' என்றான் (வசனம் 15ஆ).[23] மிகாயா, "யெகோவா இவ்வாறு கூறுகிறார்" என்று* கூறவில்லை *என்பதைக் கவனியுங்கள்.*

*மிகாயா தாம் கூறியதை அர்த்தப்படுத்தவில்லை என்பது எல்லாருக்கும்*

*தெளிவாகத் தெரிந்தது. இந்தக் காட்சியின் படப்பிடிப்புத் தொகுப்பை நான் கொண்டிருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். அவர் விளையாட்டை விளையாண்டார் என்பதை அவர் பேசிய விதமா அல்லது அவரது முகத்தில் காணப்பட்ட காட்சியா எது வெளிப்படுத்தியது?*[24]

*ஆகாப் மிகாயாவிடனிடத்தில், "நீ கர்த்தருடைய நாமத்திலே உண்மையை அல்லாமல் வேறொன்றையும் என்னிடத்தில் சொல்லாதபடிக்கு, நான் எத்தனைதரம் உன்னை ஆணையிடுவிக்க*[25] *வேண்டும்" என்று கூறினார் (வசனம் 16). அந்த வார்த்தைகளில் தான் எவ்வளவு ஆச்சரியம் நிறைந்த உணர்வு உள்ளது! ஓ, நமது நாட்களின் மார்க்க போதகர்கள் மற்றும் பிரசங்கியார்களிடத்தில் கவனித்துக் கேட்கும் மக்கள் கூட்டத்தில் உள்ள ஒவ்வொருவரும், "கர்த்தருடைய நாமத்தினாலே நீங்கள் உண்மையை மாத்திரம் பேச வேண்டும் என்று நாங்கள் உங்களுக்கு ஆணையிடுகிறோம். உண்மையை எங்களுக்குக் கொடுங்கள், முழு உண்மையையும் எங்களுக்கு கொடுங்கள். உண்மை யைத் தவிர வேறு எதுவும் வேண்டாம்'' என்று கதறுவார்களென்றால் எவ்வளவு நன்றாக இருக்கும்! முன்பே குறிப்பிட்டபடி, இந்தக் கெம்பீர மான வார்த்தைகள், விளையாட்டுகளை விளையாடிக்கொண்டிருந்த ஒரு மனிதரின், மற்றவர்களின் பிரயோஜனத்திற்காக வெற்று வார்த்தைகளைப் பேசிக்கொண்டிருந்த ஒரு மனிதரின் உதடுகளில் இருந்து வந்தன.*

*அந்த வேளையில் தேவனுடைய தீர்க்கதரிசி, "விளையாட்டுகள் எதுவும் இனியும் வேண்டாம்! அதை உள்ளது உள்ளவாறே நாம் கூறுவோமாக!" என்று கூறினார்.*

> *அப்பொழுது அவன்: இஸ்ரவேலரெல்லாரும் மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப்போல மலைகளிலே சிதறப்பட்டதைக் கண்டேன், அப்பொழுது கர்த்தர்: இவர்களுக்கு எஜமான் இல்லை; அவரவர் தம்தம் வீட்டிற்குச் சமா தானத்தோடே திரும்பக்கடவர்கள் என்றார் என்று சொன்னான் (வசனம் 17).*

*மிகாயா, வேதவாக்கியங்களை அறிந்துள்ள யாவருக்கும் நன்கு பழக்க மான சொற்றொடரைப் பயன்படுத்தினார். இந்த வார்த்தைகளை மோசே, தேவனுடைய மக்கள் "மேய்ப்பன் இல்லாத மந்தையைப்போல் இராதபடிக்கு" அவர்களுக்கு ஒரு நடத்துனருக்காக ஜெபித்தபோது பயன்படுத்தினார் (எண்ணாகமம் 27:16, 17).*[26] *இஸ்ரவேல் "எஜமானர் இல்லாத'' நிலையைக் கொண்டிருப்பதாகச் சித்தரிக்கப்பட்டது, ஆகாபின் மரணம் பற்றிய தீர்க்கதரிசனமாக இருந்தது என்பது அங்கு கூடியிருந்த எல்லாராலும் புரிந்து கொள்ளப்பட்டிருக்கும்.*

## உண்மைக்கு எதிராக விளையாட்டுக்களை நாம் விளையாடிக்கொண்டிருந்தால் நாம் தோற்றுப்போவோம்[27] *(22:18-23)*

*மரணம் பற்றிய தீர்க்கதரிசனமானது அவரது மரணம் பற்றிய முந்திய*

தீர்க்கதரிசனம் ஒன்றின்போது அவர் செய்தது போன்றே ஆகாபை முழங்காலிடும்படிக் கொண்டுவந்திருக்க வேண்டும் (காண்க 1 இராஜாக்கள் 21:27), ஆனால் இது அவ்வாறு செய்யவில்லை. அதற்குப் பதிலாக அரசர் அவமானப்படுத்தப்பட்டதாக நடித்தார். மிகாயா தம்மைப்பற்றி நல்லதாக எந்த விஷயத்தையும் ஒருக்காலும் தீர்க்கதரிசனமாக உரைத்தது இல்லை என்று கூறியபோது, தாம் சரியாகவே கூறினார் என்பதற்கான ஆதாரமாக, அவர் மிகாயாவின் வார்த்தைகளைப் பயன்படுத்தினார் (வசனம் 18). ஆகாப் உண்மையில் இருந்து பிரயோஜனம் எதையும் அடையவில்லை. அதற்கு எதிராக விளையாட்டுகளை விளையாடுதல் என்பதை மாத்திரமே அவர் செய்தார்.

ஆகாபின் முறையிடுதலைத் தொடர்ந்து, வேதாகமத்தில் மிகவும், வினோதமான வசனப் பகுதிகளில் ஒன்றை நாம் காண்கிறோம். விபரங்களை முழுமையாக நாம் ஒருக்காலும் புரிந்துகொள்ளக்கூடாத வசனப்பகுதிகளில் ஒன்றாக இது உள்ளது, ஆனால் இதன் பிரதானக் கருத்தைத் தவறவிடுதல் என்பது ஏறக்குறையச் சாத்தியமற்றதாகவே உள்ளது:

> *அப்பொழுது அவன் சொன்னது: கர்த்தருடைய வார்த்தையைக் கேளும்; கர்த்தர் தம்முடைய சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறதையும், பரம சேனையெல்லாம் [தூதர்கள்] அவரிடம் அவர் வலதுபக்கத்திலும் அவர் இடதுபக்கத்திலும் நிற்கிறதையும் கண்டேன். அப்பொழுது கர்த்தர்: ஆகாப் போய், கீலேயாத்திலுள்ள ராமோத்தில் விழும்படிக்கு, அவனுக்குப் போதனை செய்கிறவன் யார் என்று கேட்டதற்கு, ஒருவன் இப்படியும் ஒருவன் அப்படியும் சொன்னார்கள். அப்பொழுது ஒரு ஆவி [நேரடியான அர்த்தத்தில், ஆவியானவர்] புறப்பட்டு வந்து, கர்த்தருக்கு முன்பாக நின்று: நான் அவனுக்குப் போதனை செய்வேன் என்றது. எதினால் என்று கர்த்தர் அதைக் கேட்டார். அப்பொழுது அது: நான் போய், அவனுடைய தீர்க்கதரிசிகள் எல்லாரின் வாயிலும் பொய்யின் ஆவியாய் இருப்பேன் என்றது. அதற்கு அவர்: நீ அவனுக்குப் போதனை செய்து அப்படி நடக்கப்பண்ணுவாய்; போய் அப்படிச் செய் என்றார். ஆதலால் கர்த்தர் பொய்யின் ஆவியை இந்த உம்முடைய தீர்க்கதரிசிகளாகிய இவர்கள் எல்லாருடைய வாயிலும் கட்டளையிட்டார், கர்த்தர் உம்மைக்குறித்துத் தீமையாகச் சொன்னார் என்றான் (வசனங்கள் 19-23).*

தேவனுக்கு எவரொவருடைய ஆலோசனையோ அல்லது அறிவுரையோ தேவைப்படுவது இல்லை என்பதால் (ரோமர் 11:34, 35), இந்த வரலாற்றின் ஒவ்வொரு விபரத்தையும் நாம் நேரடியாக அர்த்தம் எடுத்துக்கொள்ள வேண்டுமா என்பது பற்றி நான் சந்தேகப்படுகிறேன். இருப்பினும் அடிப்படைக் கருத்து புரிந்துகொள்ள சுலபமானதாக உள்ளது. நானூறு தீர்க்கதரிசிகள் பொய்யர்களாக இருந்தனர் என்று மிகாயா கூறினார். அவர்கள் உண்மைத்தன்மை உடையவர்களாக இருந்திருக்கலாம், அல்லது அவ்வாறு இல்லாதிருக்கலாம்; ஆனால் அவர்கள் உண்மையைக் கூறவில்லை. ஆகாபிடத்தில் அவர், "இதோ, உமது தீர்க்கதரிசிகள் எல்லாருடைய வாயிலும் கர்த்தர் பொய்யின் ஆவியை வைத்திருக்கிறார்" என்று கூறினார்.

இவ்வசனப்பகுதி, "*கர்த்தர்* பொய்யின் ஆவியை … தீர்க்கதரிசிகளாகிய

இவர்கள் எல்லாருடைய வாயிலும் கட்டளையிட்டார்" என்று கூறுவது பற்றிச் சிலர் கவலைப்படுகின்றனர். "அது நியாயமல்ல" என்று அவர்கள் கூறுகின்றனர். "கர்த்தர் நானூறு தீர்க்கதரிசிகள் மூலமாக ஆகாபை வஞ்சித்துவிட்டு பின்பு ஆகாப் வஞ்சிக்கப்பட்டிருந்ததற்காக அவரைக் கண்டனம்பன்னினாரே" என்று கூறுகின்றனர். இவ்வசனப்பகுதியானது அனேகமாக, அவிசுவாசிகளின் இருதயங்களைத் தேவன் கடினப்படுத்துதல் பற்றிப் பேசுகிற மற்ற வசனப்பகுதிகளுடன் வைக்கப்பட வேண்டியது அவசியம். அவ்வசனப்பகுதிகள் பற்றிய இணைக்குறிப்புகள், கடினப்படுத்துதலைத் தேவன் *அனுமதித்தார்* என்று சுட்டிக்காண்பிக்கின்றன, ஆனால் தொடர்புடைய மக்களின் *குணத்தின்* நிமித்தமாகவே அது நடைபெற்றது. இவ்விடத்திலும் விஷயம் அப்படிப்பட்டதாகவே உள்ளது. கள்ளத் தீர்க்கதரிசிகளின் செய்தியைக் கேள்விப்பட்ட ஆகாப் வஞ்சிக்கப்பட்டார். அதே செய்தியைக் கேட்ட யோசபாத் *வஞ்சிக்கப்படாதிருந்தார்.*

இவ்விடத்தில் போதிக்கப்பட்டுள்ள கொள்கையானது, புதிய ஏற்பாட்டில் உள்ள சிந்தனையை மிகவும் தூண்டக்கூடிய வசனப்பகுதிகள் ஒன்றின் கொள்கையாகவே உள்ளது. 2 தெசலோனிக்கேயர் 2:10ல் பவுல், "கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே ... இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் *சத்தியத்தின்மேலுள்ள அன்பை* அவர்கள் அங்கிகரியாமற்போனபடியால் அப்படி நடக்கும்" என்று உரைத்தார் (என்னால் வலியுறுத்தப்படுகிறது). பின்பு அவர் பின்வருமாறு கூறினார்:

> ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு, அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார் (2 தெசலோனிக்கேயர் 2:11, 12).

"கொடிய வஞ்சகத்தைத் *தேவன்* அவர்களுக்கு அனுப்புவார்" என்ற சொற்றொடருடன் நாம் போராடுகிறோம். அந்தச் சொற்றொடரில் அடங்கியுள்ள எல்லாவற்றையும் நான் அறிவதில்லை, ஆனால் தேவன் நீதியும் நியாயமும் உள்ளவர் என்பதை நான் அறிந்திருக்கிறேன். நாம் *வஞ்சிக்கப்பட்டால்*, அது தேவனுடைய தவறாக இராது, ஆனால் நாம் சத்தியத்தை நேசிக்காதபடியால் அது *நம்முடைய சொந்தத்* தவறாகவே இருக்கும். இனி பின்வருவதைக் காட்டிலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்த கேள்வியெதுவும் இல்லை: நாம் சத்தியத்தை விரும்புகிறோமா? H. W. ஷா என்பவர் "சத்தியம் எவ்வளவு அரிதானதாக உள்ளதோ, அந்த அளவுக்கு அதனை அளித்தல் என்பது அதற்கு உள்ள தேவையைக் காட்டிலும் எப்போதும் அதிகமானதாகவே இருந்துள்ளது என்று கூறினார்."[28]

## நாம் உண்மையைப் புறக்கணிக்கக் கூடும் (22:24-28)

அங்கிருந்தவர்கள் மிகாயாவின் சிறு கதையினுடைய அர்த்தத்தைப் புரிந்து கொள்வதில் பிரச்சனை எதையும் கொண்டிருக்கவில்லை. இருப்புக் கொம்புகளைத் தனது தலையில் வைத்துக் கொண்டு அங்கு ஓடிக்கொண்டிருந்த, சிதேக்கியா என்ற கள்ளத் தீர்க்கதரிசி, மிகாயாவின் கன்னத்தில் அடித்து, பின்வரு

மாறு அறைகூவல் விடுத்தான்: "கர்த்தருடைய ஆவி எந்தவழியாய் என்னைவிட்டு உன்னோடே பேசும்படி வந்தது?" (வசனம் 24). வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், "நாங்கள் யெகோவாவினுடைய ஆவியினாலே பேசினோம், எனவே *நீ* யெகோவாவினிடம் இருந்து ஒரு செய்தியைக் கொண்டுள்ளதாக உரிமைகோரிக்கொண்டு, நாங்கள் கூறியதற்கு நேரெதிராக எப்படிக் கூறலாம்?"

இந்த செயல்பாடுகளினால் சிதேக்கியா, தான் கர்த்தருடைய ஆவியைக் கொண்டிருக்கவில்லை என்று நிரூபித்தான்.[29] யாரேனும் ஒருவரை அவரது கன்னத்தில் அடித்தல் என்பது எல்லாக் காலங்களிலும் உச்சக்கட்டமான அவமானப் படுத்துதலாக இருந்துள்ளது. அவனை மிகாயா திருப்பி அடிக்கவில்லை அல்லது ஒற்றைக்கு ஒற்றை சண்டைக்கு வரும்படி சவால் விடவில்லை. அதைத் தெளிவாக்கிக் கொள்வதற்குத் தேவனுடைய தீர்க்கதரிசி தமது தலையை உலுக்கிக் கொள்வதையும் பின்பு அமைதியாக சிதேக்கியாவினிடத்தில், "நீ ஒளித்துக்கொள்ள உள்ளறையில் பதுங்கும் அந்நாளிலே அதைக் காண்பாய்" என்று கூறுவதையும் என்னால் காணமுடிகிறது (வசனம் 25). "நீ ஒளித்துக் கொள்ள உள்ளறையில் பதுங்கும் அந்நாளிலே யெகோவாவினுடைய ஆவியைக் கொண்டிருப்பது யார் என்பதைக் காண்பாய்." இது அனேக மாக - ஆகாப் யுத்தத்தில் வெற்றிபெறுவார் என்று நானூறு தீர்க்கதரிசிகளும் சுட்டிக்காண்பித்திருந்தபின்பு - ஆகாப் இறந்து போனார் என்று யுத்தகளத்தில் இருந்து விரைவிலேயே வார்த்தை வரவிருந்த காலத்தை குறிக்கலாம். யேசபேல் அனேகமாக நானூறு தலைகளை விரும்பியவளாக இருப்பாள்!

> அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா: மிகாயாவைப் பிடித்து, அவனைப் பட்டணத்துத் தலைவனாகிய ஆமோனிடத்திற்கும், ராஜாவின் குமாரனாகிய[30] யோவாசிடத்திற்கும் திரும்பக் கொண்டுபோய், இவனைச் சிறைச்சாலையிலே வைத்து, நான் சமாதானத்தோடே வருமளவும், இவனுக்கு இடுக்கத்தின் அப்பத்தையும் இடுக்கத்தின் தண்ணீரையும் சாப்பிடக்கொடுங்கள் என்று ராஜா சொன்னார் என்று சொல்லுங்கள் என்றான் (வசனங்கள் 26, 27).

மிகாயா சிறைச் சாலைக்குத் திரும்பி அனுப்பப்பட வேண்டியவராக இருந்தார். ஆகாபிடம் "நல்ல" விஷயங்களைப் பேசாததற்காக பற்றாக்குறையான உணவளித்தல் என்பது கூடுதலான தண்டனையாக இருந்தது. பலர் கண்டறிந்துள்ளபடி, உண்மையைக் கூறியதற்காக இடர்ப்பாட்டைப் பெறுதல் என்பது அசாதாரணமானதாக இருப்பதில்லை!

"நான் சமாதானத்தோடே வருமளவும்" என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தியதில், ஆகாப் "நான் உன்னை நம்பவில்லை. நான் யுத்தத்தில் இறக்கப் போவதில்லை" என்று மிகாயாவிடம் கூறினார்: மிகாயா இழுத்துச் செல்லப் படுகையில், அவர் ஆகாபின் வார்த்தைகளை அவரிடமே திருப்பினார்: "நீ சமாதானத்தோடே திரும்பிவருகிறது உண்டானால், கர்த்தர் என்னைக்கொண்டு பேசினதில்லை." தீர்க்கதரிசி ஒருவர் கூறிய வார்த்தைகள் உண்மையானவைகளா இல்லையா என்பதே அவர் தீர்க்கதரிசிதானா என்பதற்குச் சோதனையாக இருக்கிறது (உபாகமம் 18:20-22).[31] மிகாயா, "ஜனங்களே, நீங்கள் எல்லாரும் இதைக் கேளுங்கள்" என்றும் - கூடுதலாகக் கூறினார் (வசனம் 28). "ஜனங்களே"

*என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள எபிரெய வார்த்தை வழக்கமாக புறஜாதி மக்களினங்களைக் குறித்தது. எங்குமுள்ள எல்லா மக்களுக்கும் இவ்விடத்தில் பாடம் ஒன்றுள்ளது.*

*ஆகாப் இருதயம் தொடப்பட்டாரா? உறுதியாகவே இல்லை. அவர் முடிவு வரையிலும் உண்மையைப் புறக்கணித்தார்.*

## நாம் உண்மையைப் புறக்கணித்தால் பேரழிவு என்பது தவிர்க்க இயலாததாக இருக்கும் *(22:29-39)*

*ஆகாபும் யோசபாத்தும் தங்கள் திட்டங்களைச் செயல்படுத்தத் தொடங்கி, இறுதியில் கீலேயாத்தின் ராமோத் நோக்கிச் சென்றனர் (வசனம் 29).*

*ஆகாபின் பண்பு பற்றி நாம் கண்டுள்ளவற்றில் இருந்து, மிகாயாவிடத்தில் இருந்து எச்சரிப்பு வந்தபோதும், அவர் யுத்தத்திற்குச் சென்றது ஏன் என்று நாம் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் யோசபாத், யெகோவாவிடம் விசாரித்து அறிய வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தும், அவர் ஏன் யுத்தத்திற்குச் சென்றார் என்பதைப் புரிந்துகொள்வது மிகவும் கடினமாக உள்ளது. யோசபாத் மிக ஆழமாகச் சென்றிருந்ததால் கிருபை நிறைந்த வகையில் தாம் வெளியேற இயலாதிருந்தது என்று நினைத்து இருக்கலாம். உண்மையைச் சமரசம் செய்துகொள்ளுதல் என்பது நம்மை இடர்ப்பாட்டில் இன்னும் அதிக ஆழமாகச் செல்ல வைத்துவிடுகிறது. யோசபாத் தமது உயிரை இழக்கும் நிலைக்கு நெருங்கி வந்தார்!*

*ஆகாப் தங்குதடையின்றி மிகாயாவின் எச்சரிக்கைகளைப் புறக்கணித்தி ருந்தார். "நான் சமாதானத்தோடே வருமளவும்" என்று அவர் கூறினார் (வசனம் 27). இருப்பினும் அவர் இன்னமும் பதட்டமாகவே இருந்தார். அவர்கள் யுத்தத் திற்குத் தயார்செய்துகொண்டிருந்த வேளையில், நடந்த எல்லாவற்றையும் மற்றும் கூறப்பட்ட எல்லாவற்றையும் பற்றி நினைப்பதற்கு ஆகாப் பல இரவுகளை கொண்டிருந்தார்:*

> *"உன் பிராணன் அவன் (பெனாதாத்) பிராணனுக்கு ... ஈடாகவும் இருக்கும்" (20:42).*
>
> *"நாய்கள் நாபோத்தின் இரத்தத்தை நக்கின ஸ்தலத்திலே உன்னுடைய இரத்தத்தையும் நாய்கள் நக்கும்" (21:19).*
>
> *"இஸ்ரவேலரெல்லாரும் மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப்போல மலை களிலே சிதறப்பட்டதைக் கண்டேன், ... கர்த்தர் உம்மைக்குறித்துத் தீமை யாகச் சொன்னார்" (22:17, 13).*

*யுத்தத்தின் நாளிலே, ஆகாப் பதட்டமாகவும் சீரழிந்தும் இருந்தார். வழக்க மாக அரசரே தமது படைகளை யுத்தத்திற்கு வழிநடத்திச் செல்லுவார். அவர் தமது ஆயுதங்களைத் தரித்துக்கொண்டு, தமது அரச உடைகளை ஆயுதங்களுக்கு மேலாகத் தரித்துக்கொண்டு, பின்பு படையின் முன்னணியில் பயணம்*

செய்வதுண்டு, அதற்கு பதிலாக ஆகாப் யோசபாத்திடம், "நான் வேஷம்மாறி யுத்தத்தில் பிரவேசிப்பேன்; *நீரோ* ராஜவஸ்திரம் தரித்திரும்" என்று கூறினார் (வசனம் 30அ; என்னால் வலியுறுத்தப்படுகிறது). செப்துவஜிந்த் வேதாகமத்தில், "*எனது* ராஜவஸ்திரத்தை நீர் தரித்துக்கொள்ளும்" என்றுள்ளது. ஆகாப் தம்மீதான கவனம் யோசபாத்தின்மீது திருப்பப்பட வேண்டும் என்று விரும்பினார். அதற்கு யோசபாத் ஏன் ஒப்புக்கொண்டார்? என்று நாம் மீண்டும் கேட்கிறோம். அவர் வெளியேறும் வழி எதையும் காண முடியவில்லை என்பது உறுதி. அவர் சிலந்தி யின் வலையில் சிக்கிய ஈயைப்போன்று இருந்தார்; அவர் எவ்வளவு அதிகமாகப் போராடினாரோ, அவ்வளவு அதிகமாகச் சிக்கிக் கொண்டவர் ஆனார்.

இரதங்களின் முப்பத்திரண்டு தலைவர்களுக்கும் பெனாதாத் கொடுத்தி ருந்த அறிவுறுத்துதல்களை ஆகாப் அறிந்திருந்தால் அவர் இன்னும் அதிக மாகப் பதட்டம் அடைந்திருப்பார்.[32] "நீங்கள் சிறியவரோடும் பெரியவரோடும் யுத்தம்பண்ணாமல் இஸ்ரவேலின் ராஜா ஒருவனோடே மாத்திரம் யுத்தம்பண்ணுங்கள்" (வசனம் 31). அவர்கள், "என்ன நடந்தாலும், ஆகாபைக் கண்டுபிடித்து அவரைக் கொல்லுங்கள்!" என்று கூறப்பட்டிருந்தனர். (இந்த அறிவுறுத்துதலானது, 20ம் அதிகாரத்தில் "சகோதரன்" ஆகாப் தேவன் தமக்குக் கொடுத்திருந்த வெற்றிக்குப்பின் பெனாதாத்தை தப்பி ஓடும்படி விட்டுவிட்டபின் வந்தது!)

"இஸ்ரவேலின் ராஜா வேஷம்மாறி, யுத்தத்தில் பிரவேசித்தான்" (வசனம் 30ஆ). ஆகாப் தமது இராஜ உடையை அணிந்து கொள்வதற்குப் பதிலாக, சாதாரணப் படைவீரனின் உடையை அணிந்து கொண்டிருந்தார்.

யுத்தம் மும்முரமானபோது, பெனாதாத்தின் முப்பத்திரண்டு தலைவர்களும் யோசபாத்தை இராஜ உடையில் கண்டனர். அது ஆகாப் என்று நினைத்தவர்களாக அவர்கள் அவரைச் சுற்றி வளைத்தனர். அவர்களை யோசபாத் கண்டபோது, அவர் "கூக்குரலிட்டார்" (வசனம் 32). நாளாகமத்தின் எழுத்தாளர், "அப்பொழுது யோசபாத் கூக்குரல் இட்டான்; கர்த்தர் அவனுக்கு அநுசாரியாயிருந்தார்; அவர்கள் அவனைவிட்டு விலகும்படி தேவன் செய்தார்" என்று கூடுதலாகக் கூறினார் (2 நாளாகமம் 18:31). தேவனுடைய மனிதர் உள்ளுணர்வினால் தூண்டப்பட்டு, விடுவிக்கப்படுவதற்காகக் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார். அந்தக் கூப்பிடுதலானது, அவர் கர்த்தருடைய எச்சரிக்கைக்குப் பின்னரும் யுத்தத்திற்குச் சென்ற மதியீனத்திலும் அவரைக் காப்பாற்றியது. "இவன் இஸ்ரவேலின் ராஜா அல்ல என்று இரதங்களின் தலைவர் கண்டு அவனைவிட்டு, விலகிப்போனார்கள்" (வசனம் 33).

ஆகாபின் தந்திரம் வேலைசெய்தது போலக் காணப்பட்டது. அவர் முப்பத்திரண்டு தலைவர்களிடமிருந்து தம்மை ஒளித்துக்கொண்டார், ஆனால் எவரொருவரும் தேவனிடத்தில் இருந்து தம்மை ஒளித்துக்கொள்ள முடியாது. "ஒருவன் நினையாமல் வில்லை நாணேற்றி எய்தான்; அது இஸ்ரவேலின் ராஜாவினுடைய கவசத்தின் சந்துகளுக்குள் பட்டது" (வசனம் 34அ). இந்த மனிதன் நாமான் என்று யூதப்பாரம்பரியம் கூறுகிறது, ஆனால் பயிற்சிபெற்ற நிபுணர் ஒருவர் நினையாமல் வில்லை நாணேற்றி எய்தல் என்பது பொருத்தமற்றதாக உள்ளது. இது முதன்முதலாக யுத்தத்திற்கு வரும் ஒரு புதுப்பயிற்சியாள், மரணத் திற்கு அஞ்சி அம்புகளைத் தன்னால் இயன்ற அளவுக்கு எல்லாத் திசைகளிலும் வேக மாக எய்தது போன்றே அதிகமாக ஒலிக்கிறது. தேவனுடைய செயலினால், அந்த

அம்புகளில் ஒன்று ஆகாபின் கவசத்தின் சந்துகளுக்குள் தனது குறியைக் கண்டது. அப்படிப்பட்ட கவசமானது முக்கியமான உறுப்புக்களைப் பாதுகாப்பதாக இருந்தது; அதன் இணைப்புகளில் சந்துகள் இருந்தன. அந்த அம்பானது மிகவும் நுட்பமான இடத்தில் தாக்கி ஆகாபின் உடலைத் துளைத்தது.[33] ஒரு இரத்தக் குழாய் துண்டிக்கப்பட்டது என்பது உறுதி; இரத்தம் பீறிடத் தொடங்கிற்று.

"அப்பொழுது அவன் தன் சாரதியைப் பார்த்து: நீ திருப்பி என்னை இராணுவத்துக்கப்பால் கொண்டுபோ; எனக்குக் காயம்பட்டது என்றான்" (வசனம் 34ஆ). "பின்வாங்கு! பின்வாங்கு!" என்று ஆகாப் தமது சராதியிடம் கூவினார். இருப்பினும் அடுத்த வசனம், "அன்றையதினம் யுத்தம் அதிகரித்தது" என்று குறிப்பிடுகிறது (வசனம் 35அ). இரதத்தின் சாரதி, ஆகாபின் கட்டளைக்குக் கீழ்ப்படியக் கூடாத அளவுக்கு யுத்தம் மிகவும் உக்கிரமாக இருந்தது. கடைசியில் ஆகாப் நிற்க இயலாத அளவுக்கு, மிகவும் அதிகமான இரத்தத்தை இழந்தார். வேலைக்காரர்களின் உதவியுடன் அவர் இரதத்தில் நிறுத்திவைக்கப்பட்டார் (வசனம் 35ஆ; 2 நாளாகமம் 18:34).[34] அவரது இரத்தம், இரதத்தின் தட்டிலே வடிந்தது. "சாயங்காலத்திலே அவன் இறந்துபோனான்" (2 நாளாகமம் 18:34).

மிகாயா முன்னுரைத்தபடி (வசனம் 17) ஆகாப் இறந்துபோனார் என்று கண்டறியப்பட்டபோது "பொழுதுபோகும்போது அவரவர் தம்தம்பட்டணத்திற்கும், அவரவர் தம்தம் தேசத்திற்கும் போகலாம் என்று இராணுவத்தில் பறைசாற்றப்பட்டது" (வசனம் 36). அவர்கள் ஆகாபின் உடலை அடக்கம் செய்வதற்காகச் சமாரியாவுக்குக் கொண்டுவந்தனர் (வசனம் 37), பின்பு இரத்தம் தோய்ந்த அவரது இரதத்தைக் கழுவுவதற்காக, நகருக்கு வெளியே இருந்த குளத்திற்கு கொண்டுசென்றனர்.

> அந்த இரதத்தையும் அவனுடைய கவசத்தையும் சமாரியாவின் குளத்திலே கழுவுகிறபோது, கர்த்தர் சொல்லியிருந்த வார்த்தையின்படியே,[35] நாய்கள் அவன் இரத்தத்தை நக்கினது (இப்போது வேசிகள்[36] அங்கு குளித்தனர்) (வசனம் 38).

அவர்கள் குளத்தில் இரத்தத்தைக் கழுவியபோது, மலிவான ஒப்பனையும் பகட்டான தோற்றமும் கொண்ட விபசாரிகளால் அவர்கள் கவனிக்கப்பட்டனர். நகரத்தில் திரிந்து கொண்டிருந்த தெருநாய்களால் நக்கப்பட்ட இரத்தத்தில் ஒருபகுதி, வேசிகளால் பயன்படுத்தப்பட்ட தண்ணீருடன் ஒன்றுகலந்தது.

ஆகாப் கட்டியெழுப்பிய விஷயங்களின் பட்டியல் உள்ளடக்கிய, அவரது வாழ்வு பற்றிய தொகுப்புரையுடன் 39ம் வசனத்தில் இவ்வரலாறு முடிவடைகிறது. இருப்பினும் அவைகள் மிகவும் சிறிதளவே விளைவுடையவைகளாக இருந்தன. நகரங்களும் தந்த அரண்மனையும் கடந்து போய்விட்டன. கடைசியில் ஆகாப் உண்மையைப் புறக்கணித்த வாழ்வை வாழ்ந்து வெட்கக் கேட்டில் மரித்தார் என்பதே பொருட்படுத்தக்கூடிய விஷயமாக இருந்தது.

## முடிவுரை

போஸ்டன் செல்ட்டிக்ஸ்ஸின் தளபதியாக இருந்து, 1993 ஜூலை மாதம் 27ம் தேதியன்று ஒரு நண்பருடன் கூடைப்பந்து விளையாடிக் கொண்டிருக்கையில், இருதயக் கோளாறினால் இறந்துபோன ரெஜி லூயிஸ் என்பவரின் மரணத்தினால்

அமெரிக்க நாடே திகைத்து நின்றது. மூன்று மாதங்களுக்கு முன்னதாக, ரெஜி ஒரு சாதாரண விளையாட்டின்போது மயங்கி விழுந்து இருந்தார். இருதயநோய் நிபுணர்கள் பன்னிரண்டுபேர் அடங்கிய குழுவானது, அவரது இருதயம் மிகவும் மோசமாக இருப்பதாகவும், அவர் இனியும் கூடைப்பந்து விளையாடக்கூடாது என்றும் கூறியிருந்தது. ரெஜி அந்த மருத்துவமனையில் இருந்து வெளியேறி இன்னொரு கருத்தை நாடினார். இந்தமுறை அவருக்கு, அவரது உடல்நிலை உயிரை அச்சுறுத்துவதாக இருக்கவில்லை என்றும், மருந்துகள் மற்றும் சிகிச்சை முறை ஆகியவற்றினால் அவைகள் கட்டுப்படுத்தப்பட முடியும் என்றும் கூறப்பட்டது. முதலாவது கருத்தைக் காட்டிலும் அதிகமாக இந்த இரண்டாவது கருத்தை ரெஜி விரும்பினார்; அதுவே அவர் கேட்கவிரும்பிய விஷயமாக இருந்தது.[37] அவர் இந்த நல்ல அறிக்கையைப் பெற்ற ஒரு சில மாதங்களிலேயே, கூடைப்பந்து விளையாடிக் கொண்டிருந்தபோது இறந்தார்.

பெரும்பான்மையான மக்கள் உண்மை தங்கள் பக்கம் இருக்க வேண்டும் என்று விரும்புவதாகவும், ஆனால் ஒருசிலரே உண்மையின் பக்கம் தாங்கள் இருக்க வேண்டும் என்று விரும்புவதாகவும் கூறப்படுகிறது. ஆகாபின் பரிதாப மான வரலாறு, கடினப்பட்ட இருதயம் கொண்டிருப்பவரும்கூட, உண்மை யைப்பற்றியும் "உண்மையைத்தவிர வேறெதுவும் இல்லை" என்பது பற்றியும் நாம் கவலையுள்ளவர்களாக *இருக்கவேண்டும்* என்று நம்பச் செய்ய வேண்டும்.

இந்தப் பாடத்தை முடிக்கும் இவ்வேளையில் நாம் இன்னும் ஒரு விஷயத்தை ஆழ்ந்து சிந்திப்போமாக: உண்மை என்பது கிறிஸ்து மற்றும் அவரது வார்த்தை ஆகியவற்றில் இருந்து பிரிக்கப்பட இயலாததாக உள்ளது. இயேசு, "நானே ... சத்தியமும் ... மாயிருக்கிறேன்" என்று கூறினார் (யோவான் 14:6).[38] பவுல், "இயேசுவுக்குள் சத்தியம் உள்ளது" என்று வலியுறுத்தினார் (எபேசியர் 4:21). இயேசு இந்தப் பூமியைவிட்டுச் சென்றபோது, அவர் தமது அப்போஸ்தலர்கள் "இயேசுகிறிஸ்துவின் புதிய ஏற்பாடு" என்று நாம் அழைக்கிற வெளிப்படுத்துதலை உண்டாக்குவதற்கு, அவர்களைச் "சகல சத்தி யத்திற்குள்ளும்" வழிநடத்துவதற்காகப் பரிசுத்த ஆவியானவரை அனுப்பினார் (யோவான் 16:13). இயேசுவைப் பற்றிய சத்தியத்தை நாம் *விசுவாசிக்கவும்* அவர் தமது அப்போஸ்தலர்கள் மூலமாக வெளிப்படுத்தியுள்ள சத்தியத்திற்குக் *கீழ்ப்படியவும்* தேவன் நமக்கு உதவுவாராக!

---

குறிப்புகள்

[1]இதற்கு முன்பு தொடர்பு இருந்திருக்கச் சாத்தியக்கூறு உள்ளது என்பதால், "பதி வேட்டில் உள்ள விபரப்படி" என்பதை நான் வலியுறுத்துகிறேன். எடுத்துக்காட்டாக, யோசபாத்தும் ஆகாபும் அவர்களின் பிள்ளைகளினுடைய திருமணத்தில் நிச்சயமாகவே சந்தித்திருப்பார்கள். [2]இந்தப் பாடத்தொடரில் நாம் இவ்விடத்தில்தான் முதன்முறையாக நாளாகமத்தில் இணைவு விபரம் ஒன்றைக் கொண்டுள்ளோம் (2 நாளாகமம் 18). நாளாகமங்கள் என்பவை தெற்கு இராஜ்யமான யூதாவுடன் தொடர்புகொண்டவை, அவை வடக்கு இராஜ்யமான இஸ்ரவேலுடன் தொடர்பு கொண்டவை அல்ல. யோசபாத் இந்த நிகழ்ச்சியில் சம்பந்தப்பட்டிருப்பதால், இது நாளாகமத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. [3]KJV வேதாகமத்தில் "joined affinity" என்றுள்ளது. [4]காண்க 2 இராஜாக்கள் 8:18, 27. [5]காண்க 2 நாளாகமம் 17:3, 4. [6]இது யூதாவைப் பொறுத்த

மட்டில் அழிவுக்குரிய ஐக்கியமாக இருந்தது. அத்தாலியாள் யூதா நாட்டிற்குள் பாகால் வணக்கத்தை அறிமுகப்படுத்தினாள். அகசியாவின் மரணத்தின்போது அவள், தான் அரியணையில் அமரக்கூடும்படிக்கு, தாவீதின் அரச குடும்பத்தில் இருந்த (தனது சொந்தப் பேரக்குழந்தைகள் உட்பட) எல்லாரையும் கொல்ல முயற்சிசெய்தாள் (யோசியா மாத்திரமே தப்பினார்). [7]2 நாளாகமம் 19:2, 3. [8]1 இராஜாக்கள் 22:32ff. [9]மத்தேயு 5:9. [10]1 இராஜாக்கள் 17:1.

[11]கவனிக்கவும் 2 கொரிந்தியர் 6:14-17. யோசபாத், ஆகாபின் மகன் அகசியாவுடன் ஒரு உடன்படிக்கை ஏற்படுத்தியதிலும் "துன்மார்க்கமாகச் செயல்பட்டார்" என்று 2 நாளாகமம் 20:35ம் வசனம் கூறுகிறது. [12]கவனிக்கவும் 1 சாமுவேல் 23:2, 4. [13]மற்ற கருத்துக்களும் தரப்பட்டுள்ளன. ஒருவேளை, இவர்களில் ஒருவர் எபிரெயப் பெயரைக் கொண்டிருந்தார் என்ற உண்மையானது (வசனங்கள் 11, 24), இவர்கள் இறக்குமதி செய்யப்பட்ட பாகால் அல்லது ஆஷெராவின் தீர்க்கதரிசிகளாக இருக்கவில்லை என்று சுட்டிக்காட்டுவதாக இருக்கலாம். [14]காண்க 1 இராஜாக்கள் 14:7ff.; 17:1; முதலியன. [15]நாளாகமத்தின் எழுத்தாளர், இந்தத் தீர்க்கதரிசிகள் ஏலோஹிம் என்பதில் இருந்து வந்த "தேவன்" என்ற பொதுப்பால் சொல்லையும் பயன்படுத்தினர் என்று கூறுகிறார் (2 நாளாகமம் 18:5). பாகால் வழிபாட்டாளர்கள் பாகாலை "ஏலோஹிம்" என்றும் குறிப்பிட்டனர். 1970களில் இருந்து வந்த புகழ்பெற்ற பீட்டில்ஸ் பாடல் ஒன்று எனது நினைவுக்கு வருகிறது: "எனது இனிய ஆண்டவர்." இது இயேசுவைப் பற்றிய பாடல் என்று பல விசிறிகள் நினைத்தனர், ஆனால் அது உண்மையில் ஒரு புறதெய்வ வணக்க ஆவிக்குரிய தலைவரைப்பற்றிப் பாடப்பட்டதாக இருந்தது. [16]"It" என்பது சாய்வெழுத்துக்களில் உள்ளது. இது மொழிபெயர்ப்பாளர்களால் கூட்டப்பட்டது என்று சுட்டிக்காண்பிக்கிறது. [17]இது பழைய ஏற்பாட்டில் பொதுவான ஒரு பெயராக இருந்தது. [18]மேலும் 16 மற்றும் 2 நாளாகமம் 18:7 ஆகிய வசனங்களையும் காணவும் ("ஒருக்காலும் இல்லை என்றல்ல, ஆனால் எப்போதும்"). [19]அல்லது, "நேர்த்தியாக உள்ளது" என்பதைக் கேள்விப்பட முடியாவிட்டால், நாம் "பிரச்சனையை பற்றி அக்கறை எடுத்துக்கொள்ளக்கூடிய ஒரு சிறிய மாத்திரை உள்ளது, ஒரு நாளுக்கு ஒன்றுவீதம் அதை நீங்கள் எடுத்துக்கொள்ளலாம்" என்று கேள்விப்பட விரும்புகிறோம். [20]இது உயர்த்தப்பட்ட ஒரு பெரிய பகுதியாக, சுத்தம்பண்ணப்பட்டு, களிமண் பூசப்பட்ட தரையாக இருந்தது, இது தானியங்களைத் தூற்றப்பயன்பட்டது. அது அரசரின் நோக்கத் திற்கு மிகச்சிறந்த இடமாக இருந்தது.

[21]அவரது பெயர், "யெகோவாவின் நியாயம்" என்று அர்த்தப்படுகிறது. அந்தப் பெயர் ஒலிக்கும் வகையை அவரது பெற்றோர் (இன்றைய நாட்களில் நாம் செய்வது போன்று) விரும்பியதால் அதை அவருக்கு வைத்தார்களா அல்லது அவர்கள் கர்த்தரைக் கனப்படுத்த விரும்பினார்களா? சிதேக்கியாவினுடைய பெற்றோர்கள் யெகோவாவுக்குப் பயந்திருந்த இஸ்ரவேலர்களாக இருந்தால், சிதேக்கியா தாம் வளர்க்கப்பட்ட வழியை விட்டு விலகியிருந்தார் என்றாகிறது. [22]பெரும்பான்மையான விளக்கவுரையாளர்கள், சிதேக்கியா உபாகமம் 33:17ல் மோசேயின் வார்த்தைகளை தெரிந்தோ தெரியாமலோ எதிரொலித்தார் என்று நினைக்கின்றனர். [23]ஒருவேளை அவரை அழைக்கச் சென்ற ஆள் அவரிடத்தில், அந்த நானூறு தீர்க்கதரிசிகளின் "சீரான" செய்தி என்னவாக இருந்தது என்று கூறியிருக்கலாம்; ஒருவேளை தேவன் அவருக்குக் கூறி இருக்கலாம். [24]விருப்பப்பட்டால், ஒருவர் தாம் கூறுவதை அர்த்தப்படுத்துவதே இல்லை என்று மற்ற வர்களுக்குத் தெளிவாக்கும் வகையில் சிலவற்றை எவ்வாறு கூறமுடியும் என்பதற்கு விரைவானதொரு செயல்விளக்கத்தை நீங்கள் கொடுக்க முடியும்: "நீங்கள் மிகவும் திறமை

சாலி!" முரண்தொடை அல்லது வஞ்சப்புகழ்ச்சியாகப் பேசப்பட்ட வார்த்தைகளுக்கு வேதாகமம் பல விவரிப்புகளைக் கொண்டுள்ளது. [25]"ஆணையிடுவிக்க" என்பது, "ஒரு வாக்குறுதியின்கீழ் உண்மையைக் கூறும்படி நான் உன்னை வற்புறுத்துகிறேன்" என்று அர்த்தப்படும் சொற்றொடராக உள்ளது. [26]எசேக்கியேல், இயேசு மற்றும் பிறரும் இந்தச் சொற்றொடரைப் பயன்படுத்தினர். [27]"விளையாட்டுகளை விளையாடுதல்" என்ற உருவகத்தை நீங்கள் தக்கவைத்துக்கொள்ள விரும்பாவிட்டால், இது பின்வருமாறு மறுசொற்றொடராக்கப்படக் கூடும்: "நாம் வஞ்சிக்கப்படுவோம்." [28]Lewis Copeland, ed., *Popular Quotations for All Uses* (Garden City, N.Y. Doubleday and Co., 1961), 469. [29]சிலர், சிதேக்கியா மிகவும் கலவரம் அடைந்த வகையில் செயல்பட்டான் என்பது, அவனும் அரண்மனையில் இருந்த மற்ற தீர்க்கதரிசிகளும் உண்மையானவர்களாக இருந்தனர் என்று நிரூபிக்கிறது என்பதாகக் கூறுகின்றனர். அவர்கள் உண்மையானவர்களாக இருந்திருக்கலாம், ஆனால் சிதேக்கியாவின் செயல்பாடு அதை நிரூபிப்பதில்லை. பல பொய்யர்கள், தாங்கள் பொய்யர் என்று அழைக்கப்படுகையில் மூர்க்கம் அடைந்ததை நான் கண்டிருக்கிறேன். [30]இவர்கள் பொறுப்பிலேயே முன்பு மிகாயா இருந்தார் என்பது உறுதி.

[31]எரேமியா 28:9ஐயும் காணவும். [32]1 இராஜாக்கள் 20:1, 16, 24 ஆகிய வசனங்களைக் காணவும். [33]வல்லுநர்கள் மிகச்சரியான இடம்பற்றிக் கருத்தொருமைப்படுவதில்லை. [34]சில எழுத்தாளர்கள், ஆகாப் இதைத் தமது படைகளின் பிரயோஜனத்திற் காகச் செய்தார் என்று கூறுகின்றனர். இருப்பினும், அவர் யுத்தத்தைவிட்டுச் செல்ல விரும்பியதை ஏற்கனவே காண்பித்து இருந்ததால், அவர் எவ்வளவு ஊறுபட்டவராக இருந்தார் என்பதைத் தமது விரோதி காணக்கூடாது என்பதற்காகவே அவர் இதைச் செய்தார் என்பதே எனது யூக மாகும். [35]நாபோத்தின் இரத்தம் யெஸ்ரெயேலுக்கு அருகில் சிந்தப்பட்டிருந்தாலும், சமாரியாவின் அருகில் ஆகாபின் இரத்தத்தை நாய்கள் நக்கியதாலும், தீர்க்கதரிசனம் மிகச்சரியாக நிறைவேறவில்லை என்று சிலர் கூறுகின்றனர். இருப்பினும், பர்ட்டன் காஃப்மென் என்பவர் பின்வரும் கருத்துக்களைக் குறிப்பிடுகிறார்: (1) ஆகாபின் மனம்வருந்துதலானது மூல தீர்க்கதரிசனத்தின் சில அம்சங்களை மாற்றிப்போட்டது (1 இராஜாக்கள் 21:27-29) மற்றும் (2) "இடத்திலே" என்பது "இந்தப் பகுதியிலே" என்று மாத்திரம் அர்த்தப்படுத்துவதாக இருக்க முடியும். இஸ்ரவேலில், யெஸ்ரயேலும் சமாரியாவும் ஒருசில மைல்கள் தூரத்திலேயே இருந்தன. (See Burton Coffman, *Commentary on 1 Kings,* 299, 300.) [36]KJV வேதாகமத்தில் யூதப்பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கும் "கவசம்" என்ற வார்த்தை உள்ளது. இருப்பினும் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள வினைச்சொல், "வேசிகள்" என்ற வார்த்தையையே ஆதரிப்பதாக உள்ளது. பெரும்பான்மையான நவீன மொழிபெயர்ப்புகள் "வேசிகள்" என்ற வார்த்தையைக் கொண்டுள்ளன. இவர்கள் ஆஷேராவின் ஆலயத்துடன் தொடர்புடைய விபசாரிகளாக இருக்கலாம் அல்லது அவ்வாறு இல்லாதிருக்கலாம். இந்த விபரம் ஆகாபின் மரணத்திற்கு வெட்கக்கேட்டைச் சேர்த்தது என்று ஏவுதல் பெற்ற எழுத்தாளர் நினைத்தார் என்பது உறுதி. [37]அவரது மனைவி, அவர் மூன்றாவது கருத்தையும் நாடியதாகக் கூறுகிறார். வல்லுநர்களின் இந்தக் குழுவானது, "திட்டவட்ட மருத்துவப் பரிசோதனை" ஒன்றை மேற்கொள்ள இயலாததாக இருந்தது. ரெஜி தாம் விரும்பிய இரண்டாவது கருத்தை நம்பினார் என்பது உறுதி. [38]காண்க - யோவான் 5:23.

## காட்சி - உதவி குறிப்புகள்

எல்லாரும் காணக்கூடும்படி பெரிதான மூன்று அட்டைகளை எடுத்துக்

கொள்ளுங்கள். முதல் அட்டையில் “உண்மை” என்று ஒருபக்கத்திலும் “உண்மையைத் தவிர வேறில்லை” என்று மற்ற பக்கத்திலும் எழுதிக்கொள்ளுங்கள். அறிமுகத்திற்கு இதைப் பயன்படுத்துங்கள். இரண்டாவது அட்டையில் “உண்மையுடன் விளையாட்டுக்களை விளையாடுங்கள்” என்று ஒருபக்கத்திலும் “இழந்து போங்கள்” என்று மறுபக்கத்திலும் எழுதுங்கள். இதை முதல் மற்றும் இரண்டாவது பிரதான கருத்துக்கள்மீது பயன்படுத்துங்கள். மூன்றாவது அட்டையில், “புறக்கணியுங்கள்” என்று ஒரு பக்கத்திலும் “பேரழிவு” என்று இன்னொரு பக்கத்திலும் எழுதுங்கள். இதை மூன்றாவது மற்றும் நான்காவது பிரதான கருத்துக்களுக்குப் பயன்படுத்துங்கள்.

## பாட வரைகுறிப்பு

*அறிமுகம்*

- A. *உண்மை/சத்தியம் முக்கியமானதாக உள்ளது (யோவான் 8:32; நீதிமொழிகள் 23:23).*
    1. *தேவனுடைய வசனத்தின் பக்கங்களில் சத்தியம் காணப்படுகிறது (யோவான் 17:17; 2 சாமுவேல் 7:28; சங்கீதம் 119:142, 151, 160).*
    2. *சத்தியத்தைக் கொண்டு நாம் என்ன செய்வோம்?*
        - a. *காண்க எரேமியா 5:1; 1 தீமோத்தேயு 4:3; 1 பேதுரு 1:22; சகரியா 8:16; எபேசியர் 4:15; 1 இராஜாக்கள் 2:4; 3:6; சங்கீதம் 86:11; யோவான் 3:21; 1 யோவான் 1:6; 1 தீமோத்தேயு 3:15.*
        - b. *காண்க ரோமர் 1:18, 25, 28; கலாத்தியர் 5:17; 2 தீமோத்தேயு 3:8; 4:4; தீத்து 1:4.*
- B. *1 இராஜாக்கள் 22ஐ நாம் ஆழ்ந்து சிந்திப்போம்.*
    1. *வேதாகமத்தைக் குறித்த நமது எண்ணப்போக்கு மற்றும் சத்தியத்தைக் காணாது விடுதல் புறக்கணித்தல் ஆகியவற்றின் விளைவு பற்றிய வல்லமை நிறைந்த பாடங்கள் இங்கு காணப்படுகின்றன.*
    2. *நமது பாடத்திற்கான தலைப்பு, 16ம் வசனத்தில் இருந்து வருகிறது.*

I. *சத்தியத்துடன் நாம் விளையாட்டுக்களை விளையாட முடியும் (22:1-17).*

- A. *தேவபக்தியுள்ள ஒரு அரசர், “உடன்பாட்டு” விளையாட்டை விளையாண்டார் (வசனம் 1-4).*
    1. *யூதாவின் அரசர், இஸ்ரவேலின் அரசரைச் சந்திக்கச் சென்றார் (வசனம் 2), இது வழக்கத்திற்கு மாறான நிகழ்ச்சியாக உள்ளது.*
        - a. *இரண்டு காரணிகள் குறிப்பிடப்பட்டுள்ள:*
            - *(1) ஒரு திருமணம் (2 நாளாகமம் 18:1; காண்க 2 இராஜாக்கள் 8:18, 27).*

(2) இஸ்ரவேலுடன் ஒரு சமாதான உடன்படிக்கை (வசனம் 44).

b. யோசபாத்தின் நோக்கங்கள் உயர்வானவைகளாக இருந்தன என்பதில் சந்தேகம் இல்லை, ஆனால் அவர் செய்தவை, கொள்கை அளவில் தவறானதாக, நடைமுறையில் பேரழிவுக்கு உரியதாக மற்றும் அதன் விளைவுகளில் மிகவும் மரணத்திற்கு ஏதுவானதாக இருந்தது.

2. சீரியர்களுக்கு எதிராக ஆகாபுடன் யுத்தத்திற்குச் செல்வதற்கு யோசபாத் சம்மதம் தெரிவித்தார் (வசனங்கள் 3, 4), இது கர்த்தரைப் பிரியப்படுத்தாத ஒரு முடிவாக இருந்தது (2 நாளாகமம் 19:2)!

B. கள்ளத் தீர்க்கதரிசிகள் "அவர்கள் - கேட்க - விரும்புவதை - அவர்களுக்குக் கூறுங்கள்" என்ற விளையாட்டை விளையாண்டனர் (வசனம் 5-7).

1. கர்த்தரை விசாரிக்க வேண்டும் என்று யோசபாத் வற்புறுத்திய போது (வசனம் 5), ஆகாப் நானூறு தீர்க்கதரிசிகளை அழைத்தார் (வசனம் 6).

a. இவர்கள் ஆகாப் கேள்விப்பட விரும்பியதை அவருக்குக் கூறுவதற்காக, அவரால் தக்கவைக்கப்பட்டிருந்த அரண்மனைத் தீர்க்கதரிசிகளாக இருந்தனர்.

b. அவர்களின் பதில் தெளிவற்றதாக இருந்தது. "கர்த்தர்" (*அதோனாயி*) என்பது பாகாலையும் யெகோவாவையும் குறிப்பிடக் கூடியதாக இருந்தது.

2. யோசபாத் திருப்தியடையாமல் யெகோவாவின் தீர்க்கதரிசி ஒருவர் வேண்டும் என்று கேட்டுக்கொண்டார் (வசனம் 7).

C. தேவபக்தியற்ற அரசர் "எனக்குச் - சம்மதியாகும் - வரையிலும் நான் - உண்மையை - விரும்புகிறேன்" என்ற விளையாட்டை விளையாண்டார் (வசனங்கள் 8-11).

1. மிகாயா என்பவர் யெகோவாவின் தீர்க்கதரிசியாக இருந்தார், ஆனால் ஆகாப், "நான் அவனைப் பகைக்கிறேன்; அவன் என்னைக்குறித்து நன்மையாக அல்ல, தீமையாகவே தீர்க்கதரிசனஞ்சொல்லுகிறவன்" என்று கூறினார் (வசனம் 8).

a. ஆகாப் ஆவிக்குரிய வகையில் "ஆமாம்சாமி என்று கூறும் மனிதர்களையே" விரும்பினார் (காண்க 2 தீமோத்தேயு 4:3, 4).

b. சில வேளைகளில் உண்மை புண்படுத்துகிறது!

2. மிகாயாவுக்கு ஆள் அனுப்பப்படுகையில் (வசனம் 9), நானூறு தீர்க்கதரிசிளும் ஆகாப் கேள்விப்பட விரும்பியவற்றையே கூறத்தொடர்ந்தனர் (வசனங்கள் 10-12).

a. இப்போது அவர்கள் அதை யெகோவாவின் நாமத்திலே செய்தனர் (வசனம் 11, 12); அவர்கள் ஆராதித்த கடவுள்களின் நீண்ட பட்டியலுடன் யெகோவாவைச்

சேர்த்துக்கொள்வதில் பிரச்சனை எதுவும் இருக்க வில்லை.

b. அவர்களில் சிதேக்கியா என்ற பெயருடைய ஒருவன் இருந்தான் (வசனம் 11).

D. இதமாய்ப்பேசிய அலுவர்கள் "உங்களுக்கு - நன்மையானதை - நான் - கூற - என்னை - அனுமதியுங்கள்" என்ற விளையாட்டை விளையாண்டனர் (வசனம் 13; காண்க ஏசாயா 30:9, 10).

E. தைரியமான தீர்க்கதரிசி, "விளையாட்டுக்களை மறந்து விடுங்கள்! நாம் அதை அது இருக்கிற விதமாகவே கூறுவோம்" என்று கூறினார் (வசனங்கள் 14-17).

1. மிகாயாவின் தொடக்கப் பதில்செயல் (வசனம் 15), 16ம் வசனத் தின் வியப்புக்குரிய உணர்வைத் தூண்டியது. ஓ, கவனிப்பவர்கள் யாவரும் தேவனுடைய உண்மையை மற்றும் "உண்மையைத் தவிர வேறெதுவும் இல்லாதவற்றை" வலியுறுத்துவார்கள்!
2. தேவனுடைய தீர்க்கதரிசி "அது இருந்த விதமாகவே அதைக் கூறினார்" (வசனம் 17): அவர் ஆகாபின் மரணத்தைத் தீர்க்கதரிசனமாகக் கூறினார்!

II. நாம் சத்தியத்துடன் விளையாட்டுகளை விளையாண்டால், நாம் இழந்துபோவோம் (22:18-23).

A. ஆகாப் விளையாட்டுகளைத் தொடர்ந்து விளையாண்டார் (வசனம் 18).

B. வேதாகமத்தில் மிக விநோதமான வசனப்பகுதிகளில் ஒன்று இங்கு காணப்படுகிறது (வசனங்கள் 19-23).

1. தேவனுக்கு, எவரொருவரின் ஆலோசனையோ அல்லது அறிவுரையோ தேவைப்படுவதில்லை என்பதால் (ரோமர் 11:34, 35), ஒவ்வொரு விபரமும் நேரடி அர்த்தமாக எடுத்துக்கொள்ளப்படலாகாது. ஆகாபின் தீர்க்கதரிசிகள் பொய்யர்களாக இருந்தனர் என்று கூறுவது நாடகத்துவமான கருவியாயிருந்தது!
2. ஒருவர் மற்ற எல்லாவற்றிற்கும் மேலாக உண்மையை நேசிக்காது இருந்தால், அவர் வஞ்சிக்கப்படும்படியும் இழந்துபோகப்படும்படியும் அவரைத் தேவன் அனுமதித்து விடுவார்! (காண்க 2 தெசலோனிக்கேயர் 2:10-12.)

III. நாம் உண்மையைப் புறக்கணிக்கக் கூடும் (22:24-28).

A. சிதேக்கியா உண்மையைப் புறக்கணித்தார் (வசனங்கள் 24, 25).

1. மிகாயாவின் சிறிய கதையினுடைய "முக்கியமான கருத்தை" புரிந்துகொள்வதில் சிதேக்கியாவுக்கு இடர்ப்பாடு எதுவும் இருக்கவில்லை (வசனம் 24).
2. 25ம் வசனம் அனேகமாக, ஆகாபின் மரணத்திற்குப் பின்பு, யேசபேலிடமிருந்து சிதேக்கியா ஒளிந்துகொள்ளவிருந்ததைக் குறிப்பதாக இருக்கலாம்.

B. ஆகாப் உண்மையைப் புறக்கணித்தார் (வசனங்கள் 26-28).

1. ''நாம் சமாதானத்தோடே வருமளவும்'' என்பது ஆகாப் எச்சரிக்கையைப் புறக்கணித்தார் என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது.
2. செயல்விளைவில் மிகாயா, ''நீ சமாதானத்தோடே திரும்பிவந்தால், நான் ஒரு உண்மையான தீர்க்கதரிசியல்ல'' என்று கூறினார் (வசனம் 28; காண்க உபாகமம் 18:20-22).

IV. நாம் உண்மையைப் புறக்கணித்தால், பேரழிவு என்பது தவிர்க்க இயலாததாக உள்ளது (22:29-39).

A. அந்த யுத்தம் நடந்திருக்கக் கூடாது (வசனங்கள் 29-33)

1. பதட்டம் அடைந்த ஆகாப், யோசபாத்தை அரச உடைகளை உடுத்திக்கொண்டு வரும்படி செய்தார். அவர் ஒரு சாதாரணப் படைவீரனாக வேஷம் மாறிச் சென்றார் (வசனங்கள் 29, 30).
2. பெனாதாத்தின் தலைவர்கள், யோசபாத்தை ஆகாப் என்று நினைத்தனர், ஆனால் அவரை யெகோவா காப்பாற்றினார் (வசனங்கள் 31-33; 2 நாளாகமம் 18:31).

B. முன்னுரைக்கப் பட்டிருந்த மரணம் (வசனங்கள் 34-39)

1. நினையாமல் எய்யப்பட்ட ஒரு அம்பு ஆகாபின் கவசச் சந்திற்குள் ஊடுருவிற்று மற்றும் அது அவரது இரத்தக் குழாயைத் தாக்கிற்று (வசனம் 34).
2. ஆகாப் யுத்தக்களத்தை விட்டுச் செல்வதற்கு முயற்சித்தார் (வசனம் 34) ஆனால் அவரால் செல்ல இயலாதிருந்தது (வசனம் 35). அவர் இரதத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த நிலையில் இறந்துபோனார் (வசனம் 35; 2 நாளாகமம் 18:34). அவரது உடல் சமாரியாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டது (வசனம் 37).
3. இரத்தம் தோய்ந்த அவரது இரதம் கழுவப்படுவதற்காகக் குளத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது, ''கர்த்தர் சொல்லியிருந்த வார்த்தையின்படியே, நாய்கள் அவன் இரத்தத்தை நக்கினது'' (வசனம் 38).

முடிவுரை

A. ஆகாபின் பரிதாபமான வரலாறானது, மிகவும் கடின இருதயம் கொண்டவர்களைக் கூட நாம் உண்மையைப் பற்றியும் ''உண்மையைத்தவிர வேறெதுவுமற்றவைகளை''ப் பற்றியும் அக்கறை கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்று நம்பி இணங்கச்செய்ய வேண்டும்!

B. இன்றைய நாட்களில், உண்மை/சத்தியம் என்பது கிறிஸ்துவையும் அவரது வசனத்தையும் விட்டுப் பிரிக்கப்படக் கூடாததாக உள்ளது (யோவான் 14:6; 5:23; எபேசியர் 4:21; யோவான் 16:13). அப்போஸ்தலர்களுக்கு வெளிப்படுத்தியுள்ள, இயேசுவைப் பற்றிய சத்தியத்தை நாம் *விசுவாசிக்கவும்* சத்தியத்திற்கு நாம் *கீழ்ப்படியவும்* தேவன் நமக்கு உதவுவாராக.